மலர்: 4
இதழ்: 11
விலை ரூபா: 1-00

# செம்பதாகை

புரட்சிகர வெகுஜன ஏடு

# அரசின் அடுத்த நடவடிக்கை என்ன?

ஊறிப்போன பழமைவாதிகள் மக்கள் நலனையும் தேச நலனையும் ஒருபோதும் மதித்து நடப்பதில்லை. அவர்கள் மக்களுக்கு கொடுக்கும்வாக்குறுதிகளை தமது வர்க்க நலனுக்காக எளிதில் மறந்துவிடுவதோ அன்றி தூக்கி வீசிவிடுவதோ அவர்களைப் பொறுத்தவரை ஒரு பாரதூரமான விஷயமும் இல்லை. நமது நாட்டு ஆளும் வர்க்க பிற்போக்கு சக்திகளுக்கு இது எவ்வகையிலும் விதி விலக்கல்ல என்பதை மக்கள் நடைமுறையில் காண முடிகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் வரைக்கும் ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் அவரது மந்திரி மார்களும் உரிய காலத்தில் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்றும் இதில் மக்கள் சந்தேகம் கொள்ளத் தேவை இல்லையென்றும் கூறி வந்தனர். ஆனால் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்பு தமது வர்க்க சுபாவத்திற்கேற்ப கொடுத்த வாக்குறுதியை தூக்கி வீசிவிட்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தலுக்குப் பதிலாக சர்வசன வாக்கெடுப்பை நடத்தி மேலும் ஆறு வருடங்களுக்கு தற்போதைய ஆட்சியை நீடிக்கச் செய்வதற்கு முன்வந்துள்ளனர்.

இத்தகைய நடவடிக்கை ஜனநாயகம், மக்களின் சுதந்திரம், இறைமை என்று கூறப்படுவனவற்றிற்கு பகிரங்கமாகவே குழி வெட்டப்படுவதையே உணர்த்துகின்றது. அதேவேளை நாம் முன்னெச்சரிக்கையாகப் பொது மக்களுக்கு திரும்பத் திரும்பக் கூறி வந்த தனிக்கட்சி—தனிநபர் சர்வாதிகாரத்தை அரசு உச்ச நிலைக்கு கொண்டுவருவதற்கான ஒரு முயற்சியாகவே சர்வசன வாக்கெடுப்பிற்கான முடிவு அமைந்துள்ளது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் யூ.என்.பி, கட்சியும் நாட்டு மக்களின் நாடித்துடிப்பை நன்கு அறிந்துள்ளனர். மிகக்குறைந்தவீதமான பெரும் பான்மைதான் யூ. என். பிக்குக் கிடைத்துள்ளது. இந் நிலையில் பாராளுமன்றப் பொதுத்தேர்தல் நடத்தினால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி விரும்பும் சட்டங்களைக் கொண்டு வந்து நடைமுறைப்படுத்துவதற்கு பாராளுமன்றத்தில்மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்கள் பெற முடியாத நிலை உருவாகிவிடும். இதற்கு முகம் கொடுக்க முடியாததினாலேயே பொதுத் தேர்தலை விடுத்து சர்வசன வாக்கெடுப்பிற்கு யூ. என். பி. அரசு முடிவெடுத்தது.

## ஜனநாயக சக்திகள் ஓரணி திரளவேண்டும்

பொதுத்தேர்தல் நடத்தாமைக்கு அரசதரப்பால் கூறப்படும் காரணம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் 'நக்சலைட்டுக்கள்' கூடுதலாக இருபதாகவும் ஆதலால் அக்கட்சிக்குள் இருக்கும் ஜனநாயக சக்திகள் மீண்டும் பலமடைவதற்கு கால அவகாசம் கொடுக்க வேண்டும் என்பதற்காகவுமே பொதுத்தேர்தல் நடத்தவில்லை என்று கூறப்படுகிறது. ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுத கதைதான் இது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் அவ்விதமான புதிய கண்டுபிடிப்பு ஒன்றை செய்யதற்காக யூ. என், பி. பின் மீதோ அல்லது ஜனாதிபதி மீதோ மக்கள் ஆச்சரியமோ, அதிசயமோ கொள்ள மாட்டார்கள் ஏனெனில் தனது பாராளுமன்ற எதிராளியான சுதந்திரக் கட்சிக்குள் பல கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடித்து அக்கட்சியை சின்னா பின்னப்படுத்துவதிலேயே தனது பதவிக்காலத்தை யூ. என், பி. பயன்படுத்தியது என்பதை மக்கள் நினைவில் வைத்துள்ளனர். ஜனாதிபதித் தேர்தல் ஒன்றில் தன்னோடு போட்டிக்கு நிற்கும் வல்லமைகொண்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகளைப் பறிப்பதற்கு பல கண்டுபிடிப்புகளைச் செய்த ஜே. ஆர். ஜெயவர்த்தனவிற்கும் அவரது யூ, என். பிக்கும் தற்போதைய 'நக்சலைட்டுக்கள்' கண்டுபிடிப்பை நடத்துவது அவ்வளவு பெரிய விஷயமில்லை, நீண்டகாலமாக பாராளுமன்றச் செல்வாக்கும் ஆட்சி அதிகாரத்தில் பலவருடங்கள் இருந்ததுமான ஒரு பாராளுமன்றக் கட்சியையே பரிசோதனை செய்யமுற்பட்டுள்ள முயற்சியானது இந்நாட்டின் ஏனைய கட்சிகளுக்கு எதிர்காலத்தில் என்ன நடைபெறப் போகின்றது என்பதிற்கு ஓர் முன்னறிவித்தலாகும் என்பது தெட்டத்தெளிவு.

முதலாளித்துவ ஜனநாயக அமைப்பு இருப்பதாகக் கூறப்படும் ஒரு நாட்டில் இவ்வாறு பலமான ஒரு எதிர்க் கட்சியைஅதிகாரத்தில் உள்ள மற்றொரு கட்சி பரிசோதனை

(8-ம் பக்கம் பார்க்க)

## தமிழர் கூட்டணியின் முடிவு
# உண்மையான எதிர்ப்பா? அல்லது கண்துடைப்பா?

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நமக்கு அக்கறை இல்லை என்று கூறி ஒதுங்கிக் கொண்டதன் மூலம் ஜே. ஆர். ஜெயவர்த்தனா மீண்டும் பதவிக்கு வருவதற்கு மறைமுகமாக உதவியளித்தவர்கள் கூட்டணித் தலைமையினர். இந்த முடிவால் இவர்கள் தமிழ் மக்களிடமிருந்து தனிமைப்பட நேர்ந்தது. அவர்களது முடிவையும், வேண்டுகோளையும் புறக்கணித்து விட்டு எட்டத்தட்ட ஐம்பது வீதமான தமிழ் மக்கள் வாக்களிப்பில் கலந்துகொண்டனர். அதுவும் குறிப்பாக யூ. என். பிக்கு எதிராக வாக்களித்தனர். அதிலும் விஷேமானது என்னவெனில் ஒரு தேசியக் கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு அதாவது கடந்த காலத்தைப் பொருட்படுத்தாத அமோக ஆதரவளித்துள்ளனர். இது தமிழ்மக்கள் மத்தியில் வளர்ந்து வந்துள்ள யூ. என், பி, எதிர்ப்பிற்கான ஒரு விழிப்புணர்வாகவே கொள்ள முடியும். அத்துடன் தமிழர் கூட்டணிக்கு தலையிடி கொடுக்கும் நிலைக்கு வளர்ந்து வரும் வாய்ப்பை ஜனாதிபதித் தேர்தலோடு ஜீ. ஜீ. பொன்னம்பலம் பெற்று விட்டார் என்ற ஒரு தோற்றமும் உருவாகி உள்ளது.

இவற்றை எல்லாம் உள்ளூர உணர்ந்து கொண்டதாலேயே எதிர்வரும் சர்வசன வாக்கெடுப்பில் தாமும் கலந்து கொண்டு பானைக்கு வாக்களிக்கும்படி தமிழ் மக்களை கேட்கப் போவதாகக் கூறி வருகின்றனர், அதே வேளை தமது பாராளுமன்றப் பதவிகளை உரிய காலத்தில் ராஜினாமச் செய்யப் போவதாகக் கூறி யூ என்.பி, பாணியிலான திகதியிடாக் கடிதங்களையும் கொடுத்துள்ளனர். இவை எல்லாம் உண்மையாகவும் விசுவாசமாகவும் செய்யப்படும் செயல்களா? அன்றி ஏற்கனவே மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்திகளுக்கும் சந்தேகங்களுக்கும் ஒரு தற்காலிக தணிப்பு வேலைகளா என்றே மக்கள் மத்தியில் பேசிக் கொள்ளப் படுகின்றது.

தமிழர் கூட்டணி உண்மையாகவே யூ, என். பி. யின் ஜனநாயக விரோத செயல்களை எதிர்த்தால் அது நாட்டின் ஏகப் பெரும்பான்மையான மக்களால் வரவேற்கப்படும். அதற்காக இந்நாட்டு முற்போக்கு சக்திகள் கூட்டணிக்கு நன்றிகூடக் கூறுவர். ஆனால் அது அப்படிச் செய்யாது என்று நம்புவதற்கே இடம் உண்டு. ஆரம்பத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடனும் ஏனைய சிலகட்சிகளுடனும் ஒரேமேடையில் யூ. என் பிக்கு விரோதமாகக் பேசுவதுபோல் பேசிவிட்டு பின்பு யூ, என் பி, எதிர்ப்புக்கு காலைவாரிவிட்டார்கள், எதிர்ப்புக்குப்பதில் பேச்சுவார்த்தைக்கும் சென்றார்கள். இப்போது கூட பானைக்கு வாக்களிக்கும் இயக்கத்தில் ஏனைய யூ, என். பி. எதிர்ப்புக் கட்சிகளுடன் இணையாது தனியாகவேபிரசாரம் செய்யப்போவதாகக் கூறி வருவதில் ஒரு அர்த்தம் இருக்கவே செய்கிறது ஏதோ ஒரு சாக்குப் போக்குக்கும் மக்களின் அதிருப்தியை தேடிக்கொள்ளாத வகையிலுமே தாம் சர்வசன வாக்கெடுப்பில் பானைக்காப் பிரசாரம் செய்யப் போவதாகக் கூறி வருகிறார்களே தவிர உண்மையான யூ. என். பி. எதிர்ப்பு அல்ல என்பதே உண்மையாகும். ஆனால் தமிழ் மக்கள் ஏற்கனவே தமது யூ. என். பி. எதிர்ப்புணர்வை உறுதியாக வெளிக்காட்டியுள்ளபடியால் கூட்டணியின் முடிவு பெரும் தாக்கத்திற்குரியதொன்றாக இருக்க முடியாது.

# அரசியல் ஆபத்தை
## மக்கள் உணரவேண்டும்
### இலங்கைகம்யூ.கட்சி(இடது) அறிக்கை

தனிநபர் — தனிக்கட்சி சர்வாதிகாரத்தை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளும் உள்நோக்கத்துடனேயே பொதுத் தேர்தலுக்குப் பதிலாகப் பொதுசன வாக்கெடுப்பு நடாத்தப்படவுள்ளது. இது ஜனநாயகத்திற்கும், மக்களின் சுதந்தரத்திற்கும் நேரடியாக விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தாகும்.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) தேசிய அமைப்புக்கமிட்டியின் சார்பில் அதன் செயலாளர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில் மக்களுக்கு ஏற்கனவே கொடுத்துள்ள வாக்குறுதியின்படி பாராளுமன்றப் பொதுத் தேர்தலை நடாத்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களைப் பெறமுடியாது என்பதை உணர்ந்துகொண்டதாலேயே யூ. என். பியும்—ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் பொதுத்தேர்தலைவிட்டு பொதுசன வாக்கெடுப்பை நடாத்தவுளனர். அதேவேளை எதிர்க்கட்சியினரைப் பழிவாங்கியும் எதிர்க்கருத்துடையோரை விசாரணைக்கு உட்படுத்தியும், பத்திரிகைகள் சிலவற்றிற்குத் தடைவிதித்தும், அச்சகங்கள் சிலவற்றிற்கு சீல் வைத்தும். அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின் ஆரம்பித்துள்ள இவ் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகள் பொதுசன வாக்கெடுப்பின் பின்பு நேரடியாகவே எதிர்க்கட்சிகளை தடை செய்துவிடும் நிலைக்குக் கொண்டு சென்று

(8-ம் பக்கம் பார்க்க)

# ஜனநாயகப் போர்வை வீசி எறியப்படும் பாசிச நடைமுறை அமுலாகும்

## கருத்தும் கண்ணோட்டமும்

ஜனமகன்

இதற்கு முன்னர் இப்பகுதியிலே நாம் சுட்டிக் காட்டியிருந்தது போல, ஜனாதிபதி தேர்தலின்போது எதிர்க்கட்சிகளின் பலவீனங்கள் அனைத்தும் வெவ்வேறு வகையில் வெட்ட வெளிச்சமாயின. பரந்துபட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு—யூ. என், பி. எதிர்ப்பு—என்பனவற்றை முழுமூச்சாக நடத்துவதற்குப் பதிலாக எதிர்கட்சிகள் உள் முரண்பாடுகளினால் பிளவுபட்டு, அநாவசியமான தனிநபர் வாதங்களினால் சீரழிந்து உருக்குலைந்தன. நாம் அடிக்கடி இப்பகுதியிலே கூறிவந்திருப்பதற்கு இணங்க சர்வதேச முதலாளித்துவமும் ஏகாதிபத்திய சூழ்ச்சிமுறைகளும் பாரதூரமாகப் புகுந்து விளையாடியுள்ளன. மக்கள் தம்மை 'எதிர்நோக்கும் பேராபத்தை உணர்ந்த நிலையில் யூ. என். பீ. எதிர்ப்புணர்வை இயன்ற வரை காட்டினர். பல்வேறு சங்கடங்கள் மத்தியிலும் பிரதான எதிர்க்கட்சி வேட்பாளர் இவ்வளவு வாக்குகள் பெற்றதே மக்கள் உணர்வின் பிரதிபலிப்பாகும். உள்ளூர்—அந்நிய — தாக்குதல்களுக்கு முகம் கொடுத்து மக்கள் இவ்வளவு தூரம் நின்று பிடித்ததே நம்பிக்கை அளிப்பதாகும். ஆயினும் இடதுசாரிகள் என்றும் பாட்டாளி வர்க்கத்தின் பிரதிநிதிகள் என்றும் கூறிக்கொண்டு ரொட்ஸ்கிய வாதிகளும், விஜேவீர கும்பலும் புரிந்த கழுத்தறுப்புகளும் துரோகச் செயல்களும், நீசத்தனமானவை மட்டுமல்ல மக்கள் விரோத செயல்களுமாகும். வரலாற்றில் கொல்வின் விஜேவீரா வகையறுக்கள் எப்பொழுதுமே கண்டிக்கப்பட வேண்டியவர்களாய் இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இந்தநாட்டில் தொழிலாளர் இயக்கமும் மார்க்சிச இயக்கமும் முளை விடத்தொடங்கிய காலமுதல் ரொட்ஸ்கிய வாதம் உடன் பிறந்தே கொல்லும் வியாதிபோல் இடதுசாரி இயக்கத்தின் ஏகோபித்த வளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் குந்தகம் ஏற்படுத்திக் கொண்டே வந்திருக்கிறது. ட்ரொட்ஸ்கிய வாதத்தை அதன் பிறப்பிலேயே நன்கு அறிந்த ஸ்டாலின், அது இடதுசாரி இயக்கத்துக்குள் ஊடுருவியுள்ள முதலாளித்துவ கண்ணோட்டத்தின் வெளிப்பாடு என்று சரியாகக் குறிப்பிட்டார். பிலிப் குணவர்த்தனா முதல் கொல்வின் ஆர் டீ சில்வா வரை ட்ரொட்ஸ்கிய வாதிகள் இலங்கையில் நமக்குக் காட்டி வந்திருக்கும் 'சாதனை' என்ன? பேச்சில் அதிதீவிரவாதமும் நடைமுறையில் படுமோசமான சரணாகதியுமாகும். பிலிப் குணவர்த்தனா யூ. என். பீ. ஆட்சியில் அமைச்சராக இருந்து இறந்த பொழுது எட்டிப் பார்க்கக் கூட ஆட்கள் இருக்கவில்லை. கொல்வினும் அந்தப் பாதையில் செல்லலாம் என்றே தோன்றுகிறது. "தங்க மூளைகள்" மங்கும் சமயத்தில் தனிநபர் வாதத்தின் உச்சியையே எட்டி விடுகின்றன என்பது உண்மையே.

## தேசிய அரசு உருவாகினால் ஏனைய கட்சிகள் ஒழிக்கப்படும்

எனினும் இவ்வளவு தூரம் டிரொட்ஸ்கிய வாதிகள் குறித்து நாம் எழுதவேண்டிய தேவையே இல்லை. ஏனெனில் கொல்வின் பெற்ற வாக்குகளைப் பார்க்கும் பொழுதும், மக்கள் மத்தியிலே கொல்வின் பற்றி நிலவும் எண்ணங்களை அவதானிக்கும் பொழுதும் ஒன்று தெளிவாகிறது ஜனாதிபதித் தேர்தலுடன் சமசமாஜக் கட்சியும் சமாதி அடைந்து விட்டது என்று கூறலாம். அந்தவகையில் இந்த நாட்டின் முற்போக்கு இயக்கத்துக்கு ஒரு இலாபமே. தமிழ்ப் பகுதிகளில் சமசமாஜக் கட்சி கடந்த பதினைந்து ஆண்டுகளாகச் செத்த நிலையிலேயே இருந்தது இப்பொழுது தென்னிலங்கையிலும் அதன் கதை முடிந்து விட்டது என்பதில் எதுவித ஐயமுமில்லை. நச்சுமரம் ஒன்று வீழ்வதில் மகிழ்ச்சி அடையலாம் தானே.

உலக ரீதியாகப் பார்க்குமிடத்து முதலாளித்துவம் நெருக்கடியான சூழ்நிலையில் உச்சகட்டத்தை அடையும் போது தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காகப் பாசிஸ முறைகளை மேற்கொள்ளுகிறது என்று வரலாறு காட்டுகிறது. தற்சமயம் உலகமுதலாளித்துவம் தனதுப்ரிசோதனைக் களமாகவும் கேந்திர ஸ்தானங்களில் ஒன்றாகவும் கருதியிருக்கும் இலங்கையில் தனது அக்கறைகளைப் பேணுவதற்காக ஜனநாயகம் என்ற போர்வையை எறிந்து விட்டு ஒளிவு மறைவு இன்றி பாசிஸத்தைக் கட்டவிழ்த்து விட ஆயத்தம் செய்து வருகிறது. ஹிட்லர், முசோலினியும் சரி தென்கொரிய, பிலிப்பைன்ஸ் சர்வாதிகாரிகளும் சரி, உலகத்தின் கண்களில் மண்ணைத் தூவுவதற்காக, பாராளுமன்றம் என்ற ஒன்றை வைத்திருக்கத்தான் செய்தார்கள். செய்கிறார்கள் 'மக்கள் பிரதிநிதிகள்' என நியமனம் பெற்றவர்கள் அரசாங்கத்தரப்பிலும் எதிர்த்தரப்பிலும் இருப்பார்கள். ஆனால் உண்மையான அதிகாரம் வேறு எங்கோ இருக்கும். ஹிட்லர் தனது பாராளுமன்றத்தை பிரசங்க மேடையாகவே பயன்படுத்தினான், சில விஷயங்களை அறிவிப்பதற்கு வசதியான களமாக பாராளுமன்றத்தைப் பயன்படுத்தினான் அவ்வளவுதான். பாசிஸப்போக்கில் இந்நாட்டிலும் வரலாறு மீண்டும் நடைபெற இருப்பதாகவே தோன்றுகிறது. 'சர்வாதிகாரிகள் அனைவரும் கம்யூனிஸ பூச்சாண்டி காட்டுவதில் வல்லவர்கள், கம்யூனிஸப் பயங்கரவாதத்திலிருந்தும், சட்டமீறல்களிலிருந்தும் நாட்டையும் சமுதாயத்தையும் இரட்சிப்பதாகக் கூறிக்கொண்டே சகல விதமான ஜனநாயக உரிமைகளையும் பறித்து முதலாளித்துவ பாசிஸம் ஆட்சிபுரியத் துவங்குகிறது. பிறகு அதுவே நிரந்தர ஆட்சியாக மாறிவிடுகிறது.

இத்தகைய சூழ்நிலையிலேயே தமிழர் வியாபாரக் கூட்டணி தனது இயல்பான வர்க்க சுபாவங்களுக்கு இசைய வெளிப்படையாகவே செயல்பட ஆரம்பித்துள்ளது. ரஷ்யாவிலே புரட்சிக்கு முன்னர் ஜார் மன்னன் ஆட்சியின் பிற்பகுதியிலே 'டூமா' என்ற பெயரில் பாராளுமன்றம் ஒன்று இயங்கி வந்தது. ஜார் மன்னனாலேயே நிறுவப்பட்டது. அது சில ஜனநாயக சலுகைகளை வழங்குவது போலக் காட்டிப் பாசாங்கு செய்வதற்காக—கண் துடைப்பாக—ஏற்படுத்தப்பட்ட பாராளுமன்றம் அது. அரசாங்கத்தரப்பில் பெரும் பண்ணையாளர் பிரதிநிதிகள், அரசவமிசத்துப் பிரபுக்கள், கைத்தொழில் வங்கி அதிபர்கள் போன்றோர் 'மக்கள் பிரதிநிதிகளாக வீற்றிருந்தனர். அவர்கள் யாவரும் சக்கரவர்த்தியால் பொறுக்கி எடுத்து நியமிக்கப் பட்டவர்கள். மறுபுறம் எதிர்க்கட்சியினர் இருந்தனர் இவர்கள் சீர்திருத்தவாதிகள். ஜனநாயகம் பற்றிப் பேச விரும்பியவர்கள் ஐரோப்பிய நாகரீகத்தாலும் ஜனநாயக பாரம்பரியத்தாலும் ஓரளவு கவரப்பட்டவர்கள். ஆனால் இவர்களும் ஜார் மன்னன் ஆட்சியை—சர்வாதிகாரத்தை— ஏற்றுக்கொண்டவர்கள். நிரம்பிய இராஜவிசுவாசம் உடையவர்களாக இருந்தார்கள். இவர்களிற் சிலர் மத்திய வர்க்கத்தினராக இருந்தனர். சட்டத்தரணிகளாகவும் சாதுர்யமாகப் பேசக்கூடியவர்களாயும் பெயர் பெற்றிருந்தனர். வெளிநாடுகளிலும் ஓரளவு பிரபலியம் பெற்றவர்களாய் விளங்கினர். ஆனால் அடிப்படையில், தொழிலாளர் வர்க்கத்தையும் பொதுவுடமைக் கருத்துக்களையும் வெறுப்பவராயிருந்தனர். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரஷ்ய பிரமுகர் ஒருவர் ஒரு சந்தர்ப்பத்தில் இங்கிலாந்து சென்றிருந்த பொழுது தன்னைப்பற்றிக் கூறியது வரலாற்றுப் பிரசித்தி பெற்றது, 'நாம் மாட்சிமை பொருந்திய ஜார் சக்கரவர்த்திக்கு எதிர்க்கட்சியினர் அல்லர் அவருடைய எதிர்க்கட்சியினர் ஆவோம்'

அதன் அர்த்தம் என்னவென்றால் மன்னருடைய ஆணைக்குள் இயங்கும் எதிர்க்கட்சியினர் என்பதேயாகும். அதாவது அடிப்படையான—பாரதூரமான — முரண்பாடுகள் கிடையாது, சில்லறை அபிப்பிராய பேதங்களே இருக்கக்கூடும் என்பதாகும். கடந்த காலத்தில் தமிழர் வியாபாரக் கூட்டணி பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சியாக இயங்கி வந்ததைப் பார்த்த போதும் இனி வருங்காலத்தை எண்ணிப் பார்க்கும்போதும் மேலே கூறிய ஜார் மன்னனின் எதிர்க் கட்சியினர் நினைவே வருகிறது. அமிர் கும்பலின் சாதனை அப்படித்தான் இருந்து வந்திருக்கிறது. ஜனாதிபதியின் முகமும் மனமும் கோணாமல் நடந்துகொள்ள வேண்டும் என்பதே அமிரின் பிரதான குறிக்கோளாக இருக்கிறது. வர்க்க சமரசம் ஒருபுறமிருக்க அதற்கும் அப்பால் அமிருக்கு ஏதோ கடப்பாடு இருக்கிறதாகவே மக்கள் மத்தியில் இப்பொழுது அதிகம் அதிகமாகப் பேசப்படுகிறது. அமிரின் தாய்வான் விஜயமும் அடிக்கடி நினைவுகூரப்படுகிறது.

தேசிய அரசாங்கம் என்ற பேச்சு அரசாங்கப் பத்திரிகைகளில் இப்பொழுது அடிபடுகிறது. பல்வேறு அரசியற் கட்சிகளையும் இணைத்து நாட்டின் நன்மைக்காக பரந்து பட்ட வகையில் செயற்படுவதே தேசிய அரசின் சிறப்புத் தன்மை என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது. இதன் உண்மை யதார்த்தம் என்ன? தேசிய அரசாங்கம் என்பது பல்வேறு அரசியல் கட்சிகளிலும் உள்ள வலது சாரிகள் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் ஒன்று சேர்ந்து வலதுசாரி சர்வாதிகாரத்துக்கு நியாயப்படுத்தல் வழங்குவதே ஆகும். வர்க்கங்களும் வர்க்க நலன்களும் இருமுனைப்படுவதையே இது கூர்மையாகக் காட்டுகிறது. இன்னுமொன்று தேசிய அரசாங்கம் பல கட்சிகளால் அமைக்கப்பட்டதென்று கூற முடியுமானால் பின்னர் பல் கட்சிக்குத் தேவையே இல்லாமல் போகும். அதாவது ஆளும் கட்சியிலேயே அனைவரும் சங்கமம் என்று கூறலாம். அதனால் ஏனைய கட்சிகள் கலைக்கப்பட வழி பிறக்கும். அதுதான் ஒரு கட்சி ஆட்சி அல்லது முதலாளித்துவ சர்வதிகாரம். சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இது வே நடக்கிறது, அந்த வழியிலேயே இந்த நாடும் நடைபோட இருக்கிறதா? மக்கள் தான் இறுதியில் இதற்கு விடைகாண வேண்டும்.

★

## சீனாவில் சிறுபான்மை இனவீதம் வளர்ச்சி!

கடந்த யூலை மாதம் முதலாம் திகதி கணக்கெடுக்கப்பட்டு அண்மையில் வெளியிடப்பட்ட புள்ளி விபரங்களின்படி சீனாவின் பெரும்பான்மை இனமான ஹான் இனத்தின் எண்ணிக்கை 93 கோடி 67 இலட்சமாகும். அதாவது மொத்த சனத்தொகையில் 93·3 சதவீதமாகும். சிறுபான்மை இனங்களின் எண்ணிக்கை 6 கோடி 72 இலட்சமாகும்—இது மொத்த சனத்தொகையின் 6·7 சதவீதமாகும்,

1964-ம் ஆண்டுப் புள்ளி விபரங்களை ஒப்பிடுகையில் ஹான் இனத்தின் சனத்தொகை 28 கோடி 54 இலட்சத்தால் அதிகரித்துள்ளது அதாவது 43·8 சதவீத அதிகரிப்பு, அதேசமயம் சிறுபான்மை இனங்களின் எண்ணிக்கை 2 கோடி 73 இலட்சத்தால் அதிகரித்துள்ளது—அதாவது 68·4 சதவீத அதிகரிப்பு,

சிறுபான்மை இனங்களில் 10 இலட்சத்துக்கு அதிகமாக உள்ள இனங்கள் 1964ல் பத்து இருந்தன. இன்று அது 15 ஆக அதிகரித்துள்ளது,

## அக்டோபர் 21-ன் பாதையில் சாதி அமைப்பைத் தகர்ப்போம்!

சாதி அமைப்பின் கோரப் பிடியில் அகப்பட்டு அடிமைவாழ்வு வாழ்ந்து வந்த தாழ்த்தப்பட்ட மக்களின் ஆண்டாண்டு கால வரலாற்றில் ஒரு புகழ்மிக்க வரலாற்றுத் திருப்பு முனையை ஏற்படுத்திய நாள்தான் 1966-ம் ஆண்டு அக்டோபர் 21 எழுச்சி நாளாகும். அன்று வரை சாதி அகம்பாவம் கொண்டோரிடமும், அவர்களது அரசியல் பிரதிநிதிகளான தமிழ்த் தலைவர்களிடமும் சமத்துவத்திற்காக உரிமைப் பிச்சை கேட்டு வந்தநிலையை மாற்றி, நமது உரிமைகளை நமது முயற்சியால் பெற்றெடுப்பது, அதற்காக எந்த விலையையும் கொடுப்பதற்குத் தயாராகி விட்டோம் என்ற புரட்சிகர சங்கநாதத்தைக் கிளப்பி தாழ்த்தப்பட்ட மக்களும் ஏனைய முற்போக்காளர்களும் எழுச்சி நடைபோட்ட நாள் தான் அக்டோபர் 21-ம்திகதியாகும்.

கடந்த பதினாறு ஆண்டுகளிலும் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வில் அவர்களுக்கு மறுக்கப்பட்டுவந்த சமத்துவ உரிமைகளில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன. அநேகமான தேனீர் கடைகள், ஏனைய பொது இடங்கள் பிரசித்திபெற்ற ஆலயங்கள் போன்றன மக்களின் விட்டுக்கொடுக்காத போராட்டங்களுக்கு ஈடுகொடுக்க முடியாது திறந்து விடப்பட்டன, சமத்துவம் வழங்கப்பட்டன. பகிரங்கமாக சாதித் துவேஷம் கிளப்பிய நிலை தளர்ச்சி கண்டு தாழ்த்தப்பட்ட மக்களினதும் ஏனைய முற்போக்கர்களினதும் நிலையில் முன்னேற்றம் காண முடிந்தது.

இத்தனைக்கும் மத்தியில் சாதி அமைப்பைக் கட்டிக் காக்க விரும்பும் சக்திகளின் கொட்டம் ஆங்காங்கே தலை தூக்கவே செய்கின்றது. வெவ்வேறு வழிகளில், புதிய புதிய பாதையில் தமது சாதி வெறியை நடைமுறைப் படுத்த முனைகின்றனர். இக்சாதி வெறியின் கோரத்தனத்திற்கு அண்மையில் புங்குடுதீவுக்கட்டுவன்-ஈவினை பகுதியில் மூன்று உயிர்கள் பலியாக்கப்பட்டது. தமிழ் மக்கள் தம்மை அடக்கும் இன் அடக்கு முறைக்கு எதிராக உச்சக் குரல் கொடுப்பதாகக் கூறிக் கொள்ளும் இந்த வேளையில் தன் இனத்தை—தன் மொழி பேசும் சாதாரண தாழ்த்தப்பட்ட மக்களை வதை செய்யும் கேவலத்தை என்னவென்று கூறமுடியும். இதையிட்டு தமிழ்த்தலைவர்கள் எனத் தம்மை அழைத்துக் கொள்ளும் தலைவர்கள் ஆழ்ந்த மௌனத்தில் இருக்கின்றனர். ஒரு எம். பி., இரண்டு மாவட்டசபை உறுப்பினர்கள் இன்றும் எத்தனையோ சமாதான நீதிவான்கள் எல்லோரும் தமிழ்த் தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் நியமனம் பெற்று பெருமனிதர்க

(8-ம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதித் தேர்தல் முடிவும் யூ.என்.பி. எதிர்ப்பு உணர்வும்

வெளிநாட்டு உள்நாட்டு மூலதனக்காரர்களின் மிகுந்த பண பலத்துடன், வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றின் பீரங்கிப் பிரசாரத்துடன், ஜனநாயக நடுநிலைப் பத்திரிகா தருமம் பேசும் ஏகபோகப் பத்திரிகை நிறுவனங்களின் மோசமான ஒருபக்கச் செய்திகளுடன் தொண்டமான் - அமிர்தலிங்கம், போன்ற கடைக்கோடி பிற்போக்குவாதிகளின் அமோக ஆதரவுடன், கொல்வின் - பாலா தம்பு போன்ற ட்ரொட்ஸ்கிய வாதிகளின் துணையுடன் மற்றும் பல்வேறு விதமான அரச மிரட்டல்களுடன் இலங்கை அரசியலில் நீண்டகாலப் பிற் கிடைத்திருக்கின்றன, இவ் பிடத்தில்தான் இலங்கை மக்கள் மத்தியில் காணப்படும் யூ. என். பி. எதிர்ப்புணர்வை ஒருவர் புரிந்துகொள்ள முடியும். ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகளைப் பறித்தது மட்டுமன்றி அவரை மக்கள் மத்திக்குச் சென்று பிரசாரம் எதுவும் செய்யவிடாது தடைசெய்து விட்டுத்தான் ஜே. ஆரால் மிகக்குறைந்த வீதத்தில் வெற்றிபெற முடிந்தது. இது மல்யுத்தப் போட்டி ஒன்றில் போட்டியாளனின் கைகளையும் கால்களையும் இறுக்கக் கட்டுவித்துவிட்டு மல்யுத் டித்தளம் இருக்கிறது என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது. அதற்கான கொள்கையும், செயற்திட்டமும் சரியான வழிகளில் முன்வைக்கப்பட்டு வழி நடத்தப்படுமாயின் யூ. என். பியை அதிகாரத்தில் இருந்து அகற்ற 1989ம் ஆண்டு தேர்தல்வரை காத்திருக்க வேண்டிய அவசியம் இருக்காது என்பதே உண்மையாகும்.

தமிழர் கூட்டணித் தலைமையின் யூ. என். பீ. ஆதரவு நிலைப்பாட்டை இனம் கண்டுகொண்ட தமிழ் மக்களில் ஐம்பது வீதத்திற்கு அதிகமான தமிழ் வாக்காளர்கள் வாக்க

## யூ.என்.பி. எதிர்ப்பில் வடபகுதி முன்னணி

போக்கின் உருவமாகத் திகழ்ந்து வந்த ஜே. ஆர். ஜெயவர்த்தன கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 52.91 வீத வாக்குகளைப் பெற்று மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

இங்கேஜே. ஆருக்கு கிடைத்த வாக்குகள் 34 லட்சத்து சொச்ச வாக்குகளேயாகும். அதேவேளை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு 25 லட்சத்து சொச்ச வாக்குகளும் ஏனைய கட்சிகளுக்கு ஐந்து லட்சத்து சொச்ச வாக்குகளும் கிடைத்துள்ளன. இதில் யூ. என். பீ. விரோத வாக்குகள் என்று எடுக்கும்போது கிட்டத்தட்ட முப்பது லட்சம் வாக்குகள் தத்தில் தானே வெற்றி பெற்றதாகக் கூறிக்கொண்ட ஒருவனைப் போன்றதே ஜே. ஆரின்வெற்றிப் பெருமிதமாகும், ஆனல் வாக்களித்த மொத்த வாக்காளர்களில் கிட்டத்தட்ட 47 வீதமான மக்கள் யூ. என்.பிக்கு விரோதமாக வாக்களித்துள்ளார்கள் என்பதே உன்னிப்பாக அவதானிக்க வேண்டியதொன்ருகும். ஆதலால் உண்மையான யூ. என். பி. எதிர்ப்பு சக்திகள் யூ.என், பியை எதிர்காலத்தில் தோற்கடிக்க முடியாது என்ற பலவீனமான கருத்துக்கொள்ள எவ்வித நியாயமும் இருக்க முடியாது. பலம்வாய்ந்த யூ. என். பீ. எதிர்ப்பு இயக்கத்திற்கான பரந்த மக்களின் அளிப்பில் கலந்துகொண்டு குறிப்பாக யூ. என்: பிக்கு விரோதமாக வாக்களித்துள்ளனர். யாழ். மாவட்டம், வன்னி மாவட்டம் இரண்டிலும் ஒரு லட்சம் வாக்காளர்கள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு வாக்களித்து தமது யூ. என். எதிர்ப்பை உறுதியுடன் வெளிப்படுத்தியுள்ளனர். அரசின் மிரட்டல்களுக்கோ அல்லது எலும்புத்துண்டுகள் போன்ற மயக்க வாக்குறுதிகளுக்கோ மசிந்து கொடுக்காது அதே வேளை தமிழர் கூட்டணியின் வேண்டுகோளைத் தூக்கி வீசிவிட்டு தமது உள்ளக் கிடக்கையான யூ என். பி. எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தியுள்ளனர். இதை ஜே. ஆரின் சகாவான - அமிர்தலிங்கம் கிண்டலாக வெங்காயம் மிளகாய்க்கு தமிழ் மக்களில் ஒருபகுதியினர் வாக்களித்துள்ளார்கள் என்று அளாப்பித்தனமாகப் பதில் கூறியுள்ளார். இது தமிழ் மக்களில் கணிசமானேர் தேசிய கட்சி ஒன்றுக்கு, தென்னிலங்கையில் உள்ள முற்போக்கு சக்திகளுடன் இணைந்து அமோக ஆதரவைக் கொடுத்துள்ளதைப் பொறுக்க முடியாததினலேயே அமிர்தலிங்கம் வெங்காயக் கதை பேசநேரிட்டது. அமிர்தலிங்கத்தின் தர்க்கப்படி பார்த்தாலும்கூட ஒரு உண்மை புலப்படுகிறது. அதாவது பொருளாதாரப் பிரச்சினை முதலிடத்தையும் இனமொழிப்பிரச்சினைகள் இரண்டாம் இடத்தையும் வகிக்கின்றன என்று மாக்ஸிஸ்டுகள் கூறுவதை ஒப்புக் கொள்ளுகிருர் போலும்.

தமிழர் கூட்டணி தலைமையும் அமிர்தலிங்கமும் எவ்வளவுதான் யூ. என். பிக்கு வெள்ளை அடிக்க முற்பட்டாலும் கடந்த ஐந்து வருடகால யூ. என். பி. ஆட்சியின் கோரத்தனங்களை ஏனைய மக்களைப் போல் தமிழ் மக்களின் மனத்திரைகளில் இருந்து அகற்றி விடமுடியாது, தமிழ் மக்களுக்கு பொருளாதார அரசியல், கல்வி கலாச்சார வழிகளில் யூ என்.பி. செய்து வந்த புறக்கணிப்புகளும், குறிப்பாக ஆயுதப்படைகளின் அடக்குமுறைகளும் இனவாத வன்செயல்களும் தமிழர் கூட்டணியின் துரோகத்துக்கு மேலால் தமிழ் மக்களை யூ, என். பி. எதிர்ப்பில் முன்னேற வைத்துள்ளன என்றே கூறவேண்டும். எல்லாக்காலமும் தமிழ் மக்களையோ அன்றி ஏனைய மக்களையோ தலைவர்கள் எனப்பவனி வருபவர்களால் ஏமாற்ற முடியாது என்பதற்கு ஜனதிபதித் தேர்தலில், தமிழ் மக்கள் குறிப்பாக வட பகுதி மக்களின் நிலை தகுந்த ஓர் உதாரணமாகும்.

### தலைவன் இல்லாக் கப்பல்!

தமிழர் கூட்டணியின்செயலாளர் நாயகம் திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அடிக்கடி தன்னை கப்பல் தலைவனுக்கு ஒப்பிட்டு வந்ததை யாரும் எளிதில் மறந்திருக்க மாட்டார்கள், கப்பல் தலைவனுக்குத்தான் தெரியும் எங்கே பாறை உண்டு, எங்கே சுழிகள் உண்டு. புயல் வந்தால் என்ன செய்வது, மழை வந்தால் எப்படிச் செலுத்துவது என்ற ஒப்புமைகளைக் கூறித் தமிழினத்துக்குத் தலைமை தாங்கும் பொறுப்பை இந்த நாயகம் விளங்கப்படுத்தி வந்தார். அண்மையில் ஜனதிபதித்தேர்தல் என்ற பாறைகளும் சுழிகளும் நிறைந்த இடத்தைக் கப்பல் அடைந்ததும் அவற்றில் இருந்து கப்பலை திதானமாகச் செலுத்த வேண்டிய கப்பல் தலைவன் கப்பலைவிட்டு கரைக்குத் (லண்டன்-லிபியாவுக்கு) தப்பியோடி விட்டார். மேல்தளத்தில் உள்ள அவரது சகாக்கள் திக்குமுக்காடினர். அடித்தளத்தில் உள்ள மக்களில் ஏராளமானேர் கப்பலை விட்டு வெளியேறி ஆபத்தைத் தாண்டிக் கொண்டனர். ஆபத்து நீங்கும் கட்டத்தில் கப்பல் தலைவன் ஓடோடி வந்து மீண்டும் சுக்கான் பிடிக்க முற்பட்டுள்ளார். இப்போது மேற்தளத்தில் உள்ள அவரது சகாக்கள் மத்தியிலும் அதிருப்தி. கீழ்த்தளத்தில் மக்கள் இல்லை. எஞ்சி இருக்கும் கீழ்த்தள மக்கள் மத்தியிலும் தலைவனைப் பற்றிய சந்தேகமும், நம்பிக்கையீனமும் நிலவுகின்றது. ஆகா! கப்பல் தலைவனுக்கு உரிய லட்சணம்தான் எத்தகையது!

## தேர்தலோ தேர்தல்

ஜனதிபதி தேர்தல் முடிவுகள் இந்த நாட்டில் இனிமேலும் தேர்தல்கள் நேர்மையான முறையில் நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டு முகத்தில் அறைந்தது போல் அமைந்துள்ளன. பாராளுமன்றத் தேர்தல் பற்றிய அறிவிப்பு 'செம்பதாகை' வாசகர்கட்கு வியப்பூட்டி இராது. எதிர்பார்த்தது போல் பொதுஜனவாக்கெடுப்பு அறிவிப்பு. அடுத்த நிகழ்ச்சி தேசிய அரசாங்கம் என நம்பலாம்.

பாராளுமன்றப் பாதையை பாராளுமன்ற இடதுசாரிகள் மறந்து விடலாம் என்ற நிலை 1956—60 வாக்கில் தெளிவானது. இனிமேல் ஸ்ரீ ல. சு. க. கூட பாராளுமன்றப் பாதை மீது நம்பிக்கை வைக்க முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. நம் நாடு சிங்கப்பூர் போல் செல்வ செழிப்பு அடையா விட்டாலும் சிங்கப்பூர் பாணியில் அரசியல் 'முன்னேற்றம்' அடைந்து விட்டது. மிரட்டலும், அடக்குமுறையும் நேர்மையீனமும் அரசியலில் செலுத்தும் ஆதிக்கம் பன்மடங்கு பெருகி விட்டதுடன் மேலும் பெருகும் வாய்ப்பு தெளிவாகத் தெரிகிறது.

ஜனதிபதிக்கு வந்த முதலாவது வாழ்த்துச் செய்திகள் உலக ஜனநாயக முறையின் அசைக்கமுடியாத 'பாதுகாவலரான'' ரொனல்ட் ரேகனிடமிருந்தும், ஆசியாவின் ''ஈடு இணையற்ற ஜனநாயகவாதி'' யான ஜியாஉல் ஹக்கிடமும் இருந்து வந்துள்ளமை மிகவும் பொருத்தமானது என்று தான் சொல்லவேண்டும்.

★

## ஆடத் தெரியாத வான்கோழிகள்

இரண்டுங்கெட்டான் காலனித்துவசமுதாயத்தில் சாபக்கேடுகளில் ஒன்று தாழ்வு மனப்பான்மை, இதனுல்தான் நம்மிடையே 'ஈழத்து' காந்தி 'ஈழத்து முஜிபுர் போன்ற அடைமொழிகள் பரவலாக நிலவுகின்றன. ஈழம்கேட்கிறவர்களுக்குக்கூட எப்போதும் ஏதாவது ஒருமாதிரியுரு தேவைப்படுகிறது. 1960 சொச்சங்களில் தமிழரசுக் கட்சிக்குள் ஐரிஸ் விடுதலைப் போராட்டத்துக்கு மவிசு ஏற்படுத்த சுதந்திரனில் முயற்சிக்கப்பட்டது. பிறகு இஸ்ரவேல் மோகம் வந்து ஸியோனிஸ்டுகள் எவ்வாறுதங்கள் மண்ணை 'மீட்டார்கள்' என்று காவியம் பாடினுர்கள், 1970களின் நடுப்பகுதியில் பலஸ்தீன விடுதலை இயக்கம் பற்றிய மோகம் ஏற்பட்டது. (இந்த மாற்றம் ஒருவிதமான புதிர்தான்) இனி லெபனன் நிகழ்சிகளை அடுத்து தளபதியார் (ஈழத்து முஜிபுர், ஈழத்து அபராத்) தனக்கு இனி என்ன பெயர் சூடுவாரோ தெரியாது.

★

## கனவான்களின் விளையாட்டு

கிரிக்கட் கனவான்களின் விளையாட்டு என்று சொல்லப்படுகிறது, நம்நாட்டில்இன்று கிரிகட் மோகம் சமுதாயத்தின் கீழ் மட்டங்கள்வரை பரவிய போதும் கூட உயர்—உயர் நடுத்தர வர்க்கத்தினரே இன்னும் கிரிகட் விளையாட்டில்கூட்டிய ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

தென்னுபிரிக்க இனவெறியர்கள் தங்கள் இனவெறியை மூடிக்கட்டும் முயற்சியில் கறுப்பு இனத்தவர்களை (நாங்கள் எல்லோரும் கறுப்பர்கள் தான்) அங்கு விளையாட அழைத்து தென்னுபிரிக்காவைப் பகிஸ்கரிக்கும் முயற்சியை முறியடிக்கவும் நிறவெறி எதிர்ப்பியக்கத்தின் ஒற்றுமையைக் குலைக்கவும் முயல்கிறுர்கள். இங்கிலாந்து கோஸ்டியில் தென்னுபிரிக்காவில் விளையாடிய இருவர் இந்தியாவில்விளையாட தடைசெய்யப்பட வேண்டும் என்று 1981ல் இந்தியாவில் கோரிக்கை எழுந்தபோது இந்திரா காந்தி அவர்கள் இனிமேல் தென்னுபிரிக்காவில் விளையாட மாட்டார்கள் என்று உறுதிபளித்தார்கள் என்றதன்பேரில் அவர்களை இந்தியாவில் விளையாட அனுமதித்து கிரிக்கட் ஆடும் கனவான்கள் ஆசையை நிறைவேற்றினுர், அதனுல் இங்கிலாந்து—இந்தியப் போட்டிகள் முடிந்ததுமே அந்த இருவரில் ஒருவர் தென்னுபிரிக்காவுக்கு விளையாடப் போய்விட்டார். அவர் ஒரு கனவான். அவரது விளையாட்டு கனவான்களின் விளையாட்டு.

அவர்களாவது பணக்கார வெள்ளையர்கள், வெள்ளை இனவெறியர்களுடன் சமூக உறவுடையவர்களாக இருந்துவிட்டுப் போகட்டும். நம் இலங்கை ஆட்டக்காரர்கள் தன்மானமில்லாமல், களவாக தென்னுபிரிக்காவிற்கு விளையாடப் புறப்பட்டுப் போயிருக்கிறுர்களே அதைவிடக் கேவலமான செய்கை இருக்க முடியுமா? நாய் கூடப் பிழைக்காது இந்தப் பிழைப்பு.

இதெல்லாம் எவ்வாறு சாத்தியமானது? ஐந்து வருடங்களாக யூ.என்,பி பேணி வந்த மேலை நாட்டு மோகம், உலகின் ஒடுக்கப்பட்ட மக்களுடன் ஐக்கியப்படாது ஒதுங்கி நிற்கும் சந்தர்ப்பவாதப் போக்கும் இந்தஇழிவான பிராணிகட்கு இவ்வாறு செயற்படும் தைரியத்தை அளித்துள்ளன என்ருல் மிகையாகாது. முதலாளித்துவ சமூதாயத்தில் விளையாட்டு என்ருல் பணம் என்று ஆகிவிட்டது. மேலை நாட்டு விளையாட்டு வீரர்களது நடத்தை அதிவேகமாகச் சீரழிந்து வருகிறது. காரணம் பணத்தின் ஆதிக்கம், சமுதாயத்தின் சீரழிவு அதன் ஒவ்வொரு துறையிலும் பிரதிபலிக்கிறது — விளையாட்டுத் துறை விதி விலக்கல்லவே.

★

## விஜே வீரம்

கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளைக்கு. விஜேவீர அவ்வளவு கெட்டிக்காரன் இல்லை என்பது அவரது அரசியல் விலாங்குத்தனம் அகில இலங்கை ரீதியாகக் கண்ட தோல்வியிலிருந்து தெளிவாகி விட்டது.

இது ஜெட்யுகம் இல்லையா? என். எம், கொல்வின், பீலிப் ஆகியோர் பாராளுமன்ற வழியாக இறுதியில் அதி வலது சாரி முகாமுக்குச் சேவையாற்றும் நிலைக்குத் தள்ளப்பட்டு முகத்தில் கரி பூசப்பட பல வருடங்கள் தேவைப்பட்டன. விஜேவீராவுக்குச் சில மாதங்களிலேயே அது சாத்தியமாகி விட்டது. மழைக்கு முளைக்கும் காளான் கூடப் பரவாயில்லை.

### சம்பவங்களும் அதன் போக்குகளும்

★

... அவதானி ...

★

## ட்ரொஸ்கியின் அடிச்சுவட்டில்...

தேர்தல் முடிவில் ஜேஆரை பாராட்டக் கொல்வின் மட்டுமே காத்திருந்தார், மற்ற அபேட்சகர்கள் குமார், விஜேவீரா உட்பட யாருமே காத்திருக்கவில்லை. என். எம்மிற்கு ஜே. ஆர். தன் நன்றிக்கடனை அவரது இறுதி யாத்திரை மூலம் செலுத்திஞர். கொல்வினுக்கு எவ்வாறு செலுத்துவாரோ தெரியவில்லை.

இன்னெரு சமசமாஜ கழுதை தேய்ந்து யூ. என். பிக் கட்டெறும்பான கதை தான், ★

# சுயநிர்ணய உரிமை என்றால் என்ன?

சுயநிர்ணய உரிமை என்றால் என்ன? இக்கேள்வி இலங்கையின் இன்றைய வரலாற்றுப் பொருளாதார நிலைமை காரணமாக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இதனைச் சரியாக விளங்கிக் கொள்வதும் தவறின்றிப் பிரயோகித்துத் தேசிய இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதும் தமிழினத்தின் விமோசனத்துக்கு மட்டுமன்றி இலங்கை மக்களின் பொது விடுதலைக்கும் அவசியமாகும்.

அந்த வகையிலே, பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தின் அடிப்படையில்—இயங்கியல் அணுகுமுறையின் பார்வைநிலையிலிருந்து தேசிய இனப்பிரச்சனை குறித்து ஆய்வு செய்வது அவசியபணியாகும்.

அந்தப்பணியில் ஈடுபடும் ஒருவர் தேசிய இனப்பிரச்சினைக்கான வரலாற்றுப் பொருளாதாரக் காரணியாதென்பதையும், அதன் தீர்வுக்கு முன்வைக்கப்பட்ட சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை வரலாற்று அடிப்படையில் பெற்றுவந்த அபிவிருத்தி எத்தகையது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். அதன் ஒளியில் மட்டுமே இலங்கையில் சுயநிர்ணயத்தின் பிரயோகம் குறித்துத் தெளிவு பெறமுடியும்.

இன்று இலங்கையில் இனப்பிரச்சினை கூர்மைப்படுத்தப்படுவதில்கூட வரலாற்றுப் பொருளாதார வளர்ச்சி நிலைகளின் நிர்ணயிப்பொன்று அடங்கியிருக்கின்றது. எமது நாட்டு மக்கள் சுயசார்பில் தங்கிநின்று சுபீட்சத்தைக் காணும் ஆவல்கொண்டிருந்த போதிலும் ஆட்சி செய்யும் பெருமுதலாளி வர்க்கக் கட்சியான ஐ. தே. க. எமது நாட்டை ஏகாதிபத்தியத்திற்கு தாரைவார்த்துக் கொடுத்து அதிலே லாபம் சம்பாதிக்கும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரின் நலன்களையே கவனத்தில் கொண்டிருக்கிறது. இக்காரணத்தினால் மக்களின் தேவைகள் நிறைவு செய்யப்படமுடியாது போகவே இப்பெருமுதலாளி வர்க்கக் கட்சியான ஐ. தே. க. இனக்குரோதங்களை வளர்த்துத் தன் வாழ்வு நீடிப்பதற்குக் களம் தேடிக் கொள்கின்றது.

இதனால் தன் ஜீவனத்தை நடத்தியும், இதற்குத் தீனி போட்டும். இதனுடன் கன்னைக் கூட்டுச் சேர்ந்தும் த. வி. கூட்டணி ஆடும் கபடத்தனமான நாடகம் இன்று அம்பலத்துக்கு வந்துள்ளது. இவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் பிரச்சினைகளின் தீர்வை முதன்மைப்படுத்துவதற்கு மாறாக அதன்மூலம் தமது சொந்தலாபத்தை வளர்த்துக் கொள்ளவே முயற்சிக்கின்றார்கள் என்ற உண்மை இன்று பட்டவெளிச்சமாகியுள்ளது.

அதேவேளை தேசிய இனப்பிரச்சினைக்குச் சரியான தீர்வு ஈட்டப்பட வேண்டும் என்ற உணர்வு மிகவும் வளர்ந்துள்ளது? குறுகிய இனவாதம் தகர்க்கப்பட்டுப் பரந்த கண்ணோட்டத்தில் ஆய்வு செய்யும் மனப்பான்மை பரவலாக வளரத் தொடங்கிவிட்டது.

இத் தேவையைப் பூர்த்தி செய்யும் பணிக்கான ஒரு தொடக்கத்தை ஏற்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம், இது ''இனப்பிரச்சினைக்கான தீர்வுக்குச் சுயநிர்ணயத்தை எவ்வாறு பிரயோகிக்க வேண்டும்'' என்ற பிரச்சினைக்குச் 'சுயநிர்ணய உரிமை என்றால் என்ன'' என்ற அடிப்படைக் கேள்விக்கு ஒரளவில் பதில் தேடுவதன்மூலம் விளக்கம்தர முயற்சிக்கும்.

சுயநிர்ணயத்தை மார்க்ஸிஸ லெனினிஸத்திடமிருந்து பெற்றுக்கொள்ளும் ஒரு ஏட்டுச் சுரக்காய் வித்துவான்கள், குட்டி முதலாளித்துவத் தவச் சிந்தனையினால் வரம்பிடப்பட்டவர்களாயிருந்து, வெறும் சொற்கோவைகளைக் கொண்டு சுயநிர்ணயத்தை விளக்க முயற்சிக்கிறார்கள், இது பாரதூரமான தவறு. இதன் மூலம் இவர்கள் இன்னும்பல பத்தாண்டுகள் பிரச்சனைகளுக்கான தீர்வின்மையை நீடிக்கவே முனைகிறார்கள். இக்காரணத்தினால் சுயநிர்ணயத்தை மார்க்ஸிஸம் வலியுறுத்துகிறபோது அதை எந்த அடிப்படையில் அர்த்தப்படுத்திக் கொள்கிறது என்பதையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

### மார்க்ஸிஸக் கண்ணோட்ட ஆராய்வு தேவை

இலங்கையில் தமிழ் மக்கள்—குறிப்பாக இளைஞர்கள் பலதரப்பட்ட இயக்கங்களின் வாயிலாக, தமிழினத்தின் ஈடேற்றத்திற்கு மார்க்ஸிஸம்-லெனினிஸம் மட்டுமே வழிகாட்டமுடியும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

இந்த நல்ல சந்தர்ப்பத்தைக் கெடுத்துத் தமிழ்மக்கள் குறிப்பாக இளைஞர்கள் தமது சொந்த நடைமுறை அனுபவத்தில் தேடிக்காணவிழையும் மார்க்ஸிஸத்தின் சாராம்சத்தை அவர்கள் அறியமுடியாமல் தடுத்துச் சொற்றொடர்களை மட்டும் அங்கும் இங்குமாக எடுத்து வைத்துக்கொண்டு அதுவே 'மார்க்ஸிஸம் என்றுகாட்டி ஒரு மயக்கத்தை ஏற்படுத்திவிடக் குட்டிமுதலாளித்துவ வாதிகளான ரொட்ஸ்கியிஸ்டுகள் முனைந்திருக்கிறார்கள் இவர்கள் மார்க்ஸ் லெனின் ஆகியோரின் படைப்புகளிலிருந்து, ஏன் மாஓவின் படைப்புகளிருந்துகூட ஏராளமான மேற்கோள்களை வாரிவழங்குகிறார்கள். இவ்விதமான குட்டி முதலாளித்துவ செப்படிவித்தைக்காரர்கள் மார்க்ஸிஸத்தின் பொருளைவிட்டு அதன் வரிவடிவத்தையே எடுத்துக்கொள்கிறார்கள். அதையும் மாற்ற முடியாத ஒரு சட்டவரையறையாக அவர்கள் கருதுகிறார்கள்.

அவ்வாறு மாற்ற முடியாத சட்டவரையறையாகக் கருதிவிட்டதாலேயே ரொட்ஸ்கீயச் சீர்குலைவாளர்களும், திரிபுவாதிகளும் சுயநிர்ணய உரிமைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மார்க்ஸிஸ ரீதியான ஆய்வை மேற்கொள்ளுவதற்குப் பதிலாக லெனினிடமிருந்து 'தயார் நிலையிலுள்ள தீர்வுகாணும் சூத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விழைகிறார்கள்.'

ஆனால், சுயநிர்ணய உரிமைபற்றிய லெனினிஸக் கோட்பாடு மாற்றத்துக்குள்ளாக்கமுடியாத இறுகிப்போன வரட்டுத் தத்துவமல்ல

நிலையானது என்று உலகில் ஒன்றும் இல்லை. ஒவ்வொன்றும் மாறுகின்றது, அழிகின்றது. இயற்கை மாறுகின்றது, சமுதாயம் மாறுகின்றது பழக்கவழக்கங்கள் மாறுகின்றன, மனித அறிவுக்கு எட்டிய உண்மை மாறுகின்றது. இவ்விதம் இயங்கியல் ஒவ்வொன்றையும் விமரிசனக் கண்கொண்டு பார்க்கின்றது, நிலையான 'உண்மை' ஒன்று உண்டு என்பதை இயங்கியல் முறை மறுக்கின்றது. இதன் காரணமாகத்தான் மனப்பாடம் செய்து, பாராமல் ஒப்புவிக்கப்படும் வரட்டுத்தனமான பொதுப்படைத் தத்துவங்களை இயங்கியல்முறை நிராகரிக்கின்றது.

இதைத்தான் மார்க்ஸிஸத்தின் முதல்வர்களான மார்க்ஸும் எங்கெல்ஸும் அன்று வலியுறுத்தி வந்தார்கள் ஆனால் மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரின் இயங்கியல்—பொருள் முதல்வாதம்கூடப் பின்னர் வரட்டு வேதாந்திகளினால் 'வரட்டுத்தனமான பொதுப்படைத் தத்துவமாக' உருமாற்றப்பட்டுப் பூஜையறை மந்திரமாகச் சீரழிக்கப்படும் எத்தனிப்புகளுக்குள்ளானது. இத்தகைய எத்தனிப்புகளுக்கு எதிராக விட்டுக்கொடுக்காத தத்துவார்த்தப் போராட்டத்தை மேற்கொண்ட லெனின் இயங்கியல்—பொருள் முதல்வாத ஆய்வு முறையைப் பாதுகாத்ததுடன், ஏகாதிபத்தியம் தோற்றுவித்த புதிய நிலைமைகளை ஆராய்வதற்கு அதனைப் பிரயோகித்ததன் வாயிலாக மேலும் செழுமைப்படுத்தினார். அவர் மேற்கு ஐரோப்பிய நாடுகளினதும் ருஷ்யாவினதும் அனுபவங்களிலிருந்து சுயநிர்ணய உரிமைக்கு குறித்த வரையறையை மாற்றமுடியாத வரட்டுத்தனமான பொதுப்படைத் தத்துவமாகக் கையாள்வது மார்க்ஸிஸ லெனினிஸத்தைத் திரிபுபடுத்துவதாகும்.

— இராவணு —

இத்தகைய திரிவுபடுத்தலினின்றும் விடுவித்துக் கொண்டு மார்க்ஸிஸக் கண்ணோட்டத்தில் ஆராய்வை மேற்கொள்வதே குட்டிமுதலாளித்துவச் சீர்குலைவுகளுக்கு எதிரான, பாட்டாளிவர்க்க நடைமுறையாகும், அதுவே இயங்கியல்—பொருள் முதல்வாத, வரலாற்றுப்-பொருள் முதல்வாத அணுகு முறையாகும்.

### வரலாற்றில் சுயநிர்ணய உரிமையின் இடம்

எந்த ஒரு சமூகப்பிரச்சினையை ஆராயும் போதும் அதைத் திட்டவட்டமான வரலாற்று எல்லைகட்குள் ஆராய வேண்டுமென்ற மார்க்ஸிஸ அடிப்படையில் சுயநிர்ணயத்தின் வரலாற்றுப் பாத்திரத்தை விளங்கிக்கொள்வது அதைப் புரிந்துகொள்வதற்கு, சரியாகப் பிரயோகிப்பதற்கும் உதவியாக இருக்கும்.

ஆதலால் சுயநிர்ணய உரிமை அதன் பிறப்பிடமான ஐரோப்பாவில் பெற்றிருந்த தோற்றவடிவத்தை நாம் முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும். ஐரோப்பிய வரலாற்றில் பிரான்ஸ்-இங்கிலாந்து ஆகிய இரு நாடுகளின் நிலப்பிரபுத்துவ முடியாட்சியாளர்களுக்கிடையில் அடிக்கடி யுத்தங்கள் நிகழ்ந்து வந்திருக்கின்றன. அவற்றில் நூறு வருடங்கள் நீடித்து, 1453 இல் முடிவடைந்த 'நூறாண்டு யுத்தம்' மிகப் பிரசித்தி பெற்ற ஒன்று.

நூறாண்டு யுத்தம் பற்றிக் குறிப்பிடும் சில வரலாற்றாசிரியர்கள், இது 'நிலமானிய யுத்தமாக ஆரம்பித்துத் தேசிய யுத்தமாக முடிவடைந்தது'' என்பர், அதாவது 15ம் 16ம் நூற்றாண்டுகளின் ''தேசிய உணர்வு'' மேற்கு ஐரோப்பிய நாடுகளில் உருவம்பெற ஆரம்பித்துவிட்டது. இது நிலவுடைமைச் சமுதாயத்தில் முதலாளிவர்க்கம் கருக்கொள்ள ஆரம்பித்தன் உடனடி விளைவாகும். அவ்வாறு கருவடிவில் தோற்றம்பெற்று வளர்நிலையில் முன்னேறிய முதலாளித்துவம் மதத்தளைகளைத் தகர்த்துத் 'தேசிய உணர்வை' மக்கள் மனதில் விதைத்து வேர் பரப்பி ஓங்கி வளர ஊக்கமளித்தது.

இந்த வளர்ச்சியின் உயர் வடிவில் முதலாளி வர்க்கம் தன்னை ஒழுங்கமைத்துக் கொண்டு, ஜனநாயகப் புரட்சியில் வெற்றியீட்டித் 'தேச அரசுகளை' நிர்மாணிக்கத் தொடங்கியது, முதற்தடவையாக 1649இல் புரட்சி மூலம் இங்கிலாந்தின் முதலாளிவர்க்கம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியது.

ஆனால், 1789இல் பிரான்ஸில் கூர்மையான வர்க்கப் போராட்டத்தின் விளைவாக முதலாளிவர்க்கம் நிலப்பிரபுத்துவவர்க்கத்தைத் தீர்க்கமாக முறியடித்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதன் வாயிலாகப் பிரான்ஸ் தான் உண்மையில் தேசியப் பிரச்சினையின் தீர்வுக்கு ஒரு உருவம் கொடுத்து வழி காட்டியது.

இந்த முன்னுதாரணத்தைப் பின்பற்றி 1871இல் ஜேர்மனி, இத்தாலி ஆகிய நாடுகள் தேச அரசுகளை நிர்மாணித்தன. அதோடுமேற்கு ஐரோப்பியநாடுகளின் தேசிய இனப்பிரச்சனை தீர்க்கப்பட்டு விட்டது.

இவ்வாறு, நிலப்பிரபுத்துவத்தை வீழ்த்தி வெற்றிகொண்ட முதலாளித்துவம் 'தேசம்' என்ற புதிய சமூக அமைப்பை நிறுவுவதற்குப் பலமான பொருளாதாரக் காரணி உண்டு, ஏனெனில் விற்பனைப் பண்ட உற்பத்தியின் முழுவெற்றிக்கு உள்நாட்டுச் சந்தையை முதலாளிவர்க்கம் கைப்பற்றியாக வேண்டும்; அது அரசியல் ரீதியில் ஐக்கியப்படுத்தப்பட்ட நிலப்பரப்புகளில் ஒரே மொழி பேசும் மக்களைக் கொண்டதாகவுமிருக்கவேண்டும், இவ்வாறு உருவாகும் மொழிவழி ஐக்கியமும் தடையற்ற வளர்ச்சியும் சுதந்திரமான விரிவான வாணிபத்துக்கு அவசியமாகும் இவ்வாறான சகல தேவைகளும் முதலாளிவர்க்கம் தேச அரசுகளை நிர்மாணிப்பதன் வாயிலாகப் பூர்த்தி செய்யப்படுகின்றன.

இப்பணியை நிறைவு செய்யும் கொந்தளிப்பான நிலை 1905ஆம் ஆண்டின் ருஷ்யா, துருக்கி, பாரசீகம், சீனா ஆகிய நாடுகளின் புரட்சிப் போராட்டங்களினூடாகக் கிழக்கு ஐரோப்பாவிலும், கீழைத்தேசங்களிலும் வெளிப்பட்டது. இக்காலக் கூறுக்கு முன்னர் பிற்போக்கின் ஊற்றுக் கண்ணாக இருந்த ஜாரிஸ ருஷ்யா இப்பொழுது புரட்சியின் கேந்திர மையமாக விளங்கியது. அங்கு இப்புரட்சி முன்னைய நாடுகளிலிருந்து வேறுபட்ட சூழ்நிலையில் தோற்றம் பெற்றிருந்தது. அதாவது மேற்குலகில் போலன்றி ருஷ்யாவில் ஏற்கனவே பிறந்துவிட்ட பாட்டாளி வர்க்கக் கட்சி (ருஷ்யசமூக -- ஜனநாயகக் கட்சி) இப்புரட்சியினூடாக வளர்ந்து கொண்டிருந்தது.

இதனால் ஒரு பாட்டாளி வர்க்கக்கட்சி, முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் பால் கொண்டிருக்கவேண்டிய கொள்கை நிலைப்பாட்டைத் தீர்க்கமாக நிர்ணயிக்கவேண்டிய கடமை ருஷ்ய சமூக-ஜனநாயகக் கட்சிக்கு இருந்தது. இதனைக் கவனத்திலெடுத்த ருஷ்ய சமூக-ஜனநாயகக் கட்சியின் 1903ஆம் ஆண்டின் மாநாடு தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதாயிற்று.

இதன் மூலம் சிறுதேசிய இனங்கள் பிரிந்து செல்லும் உரிமை பெற்றிருந்தால் இது பாட்டாளிவர்க்க ஐக்கியத்தைக் குலைக்கும் செயல் என்றும், பாட்டாளிவர்க்கப்புரட்சிக்குப் பெரிய அரசுகளின் தேவையை இது உதாசீனம் செய்துவிட்டது என்னும்காரணங்காட்டிச் சந்தர்ப்பவாதிகள் செயல்திட்டத்தில் இது இடம் பெறுவதை எதிர்த்தார்கள் இதற்கு மாறாக லெனின் 'சிறு தேசிய இனங்களின் சிறைச்சாலை'யாக உள்ள ஜாரிச ருஷ்யாவில் பிரிந்து செல்ல உரிமை உண்டென்ற நம்பிக்கையொன்றே மனப்பூர்வமான, உண்மையான ஐக்கியத்தை ஏற்படுத்த முடியுமென வாதிட்டார்.

இதைப் புரிந்துகொள்ளாத சந்தர்ப்பவாதிகள், மேற்கு ஐரோப்பிய சமூக-ஜனநாயகக் கட்சிகளில் செயல் திட்டத்தில் சுயநிர்ணய உரிமை இடம் பெறாதபோது ருஷ்ய சமூக-ஜனநாயகக் கட்சிக்கு மட்டும் என்ன அவசியமேற்பட்டது எனக் கேட்டார்கள், அதையும்மீறி சுயநிர்ணயம் ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டபோது அதன் உள்ளடக்கத்தைத் திரித்துப் புரட்ட சந்தர்ப்ப வாதிகள் முயற்சி செய்தார்கள்.

இதை முறியடிக்கும் வகையிலே லெனின் 1871ஆம் ஆண்டுடன் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தேசிய அரசுகள் உருவாக்கப்பட வேண்டிய தேவை பூர்த்தியாகிவிட்டதால் அங்கு சுயநிர்ணய உரிமைப் பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டதென்பதை வலியுறுத்தி 'சட்டரீதியான வரையறையை வைத்துக்கொண்டு

(5-ம் பக்கம் பார்க்க)

# சுயநிர்ணய உரிமை என்றால் என்ன?

4-ம் பக்கத் தொடர் ......

ஜாலவித்தைகள் செய்வதன் மூலமோ அல்லது அருவமான வரையறைகளைப் புனைவதன்' மூலமோ அன்றி, தேசிய இயக்கங்களின் வரலாற்றுப் பொருளாதார நிலைமைகளை ஆராய்வதன் வாயிலாகத் தேசிய இனங்களின் சுயநிர்ணயம் என்பதன் பொருளைப் புரிந்து கொள்ள நாம் விரும்பினால், தேசிய இனங்களின் சுயநிர்ணயத்தின் பொருள் அந்நிய தேசிய அமைப்புகளிலிருந்து இத்தேசிய இனங்கள் அரசியல் ரீதியில் பிரிந்து சுதந்திரமான தேச அரசொன்றை அமைத்தலாகும் என்ற முடிவுக்குத்தான் வந்துதீருவோம்' என்றார்.

இவ்வாறு லெனின் திட்டவட்டமாக அழுத்திக்காட்டிய இந்த வரையறையை மட்டுமே வைத்துக்கொண்டு யானையைப் பார்த்த குருடர்கள் கதைபோலத் தடுமாறுகின்ற புத்தகப்பூச்சிகளுக்கு லெனினுடைய முழுமையான ஆய்வு ஒருபோதும் தெரியாது. ஆனால் தமிழ்தேசிய இனத்தின் ஈடேற்றமே எமது குறிக்கோள்' என அல்லும் பகலும் உழைத்து 'இனி என்ன செய்யவேண்டும்?' என்ற பொறுப்பான கேள்வியுடன் மார்க்ஸிஸ-லெனினிஸத்தைக் கற்க விழைந்துள்ள மிகப் பெரும்பான்மையான நல்ல சக்திகளால் நிச்சயமாக லெனினிஸத்தைப் புரிந்துகொள்ள முடியும், அவர்களால் சுயநிர்ணயத்துக்கு லெனின் கொடுத்த வரைவிலக்கணத்துடன் கூடவே அது வரலாற்று அடிப்படையில் பெற்றுவந்த வளர்ச்சியையும்கூடக் காண முடியும்.

## "சுயநிர்ணய உரிமை — பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் உரிமை"

சமூக வளர்ச்சி வரலாற்றில், முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் வெளிப்பாடாகத் தோற்றம்பெற்ற தேசிய இயக்கம், தோற்றம்பெற்றிருந்து தனக்கே உரித்தான தொடர்ச்சியான வரலாற்றைக் கொண்டிருக்கிறது.

முதலாளித்துவத்தின் தொட்டிலாக இருந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளின் வரலாறு தேசிய இயக்கங்களின் நோக்கில் இரு வேறுபட்ட கட்டங்களைக் கொண்டிருந்தது. முதலாவது கட்டம், முதலாளிவர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றியதாகும். இக்கட்டத்தின்போது விவசாயவர்க்கமும், முழுமக்களும் அரசியல் உரிமைக் கோரிக்கையின்பால் ஈர்க்கப்பட்டனர். இரண்டாவது கட்டம் நிலைபெற்ற முதலாளித்துவ அரசுக்குரியதாகும். இக்கட்டத்தில் முதலாளிவர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடு முன்னணிக்கு வந்தது. இப்போது, 'சட்டத்தின் முன் சமத்வதும்' என்ற முதலாளித்துவக் கோஷம், வர்க்கங்களை ஒழிந்துக் கட்டும் சமூக-பொருளாதாரச் சமத்துவம் என வளர்த்தெடுக்கப்பட்டுப் பாட்டாளி வர்க்கத்தால் முன் வைக்கப்பட்டது இப்பாதையின்கீழ் அணிதிரண்டு தேசிய இனப்பிரிவை மீறி, சர்வதேச மூலதனத்துக்கு எதிராகச் சர்வதேசப் பாட்டாளிவர்க்கம் ஐக்கியப்பட்டுப் போராட்டத்தைத் தொடுப்பது இந்த இரண்டாவது கட்டத்தின் விசேஷ அம்சமாக ஆனது.

இந்த இரண்டாவது கட்டத்தின் ஆரம்ப நிலையிலிருந்தே இங்கிலாந்தின் ஆக்கிரமிப்பின் கீழ் அயர்லாந்து இருந்து வந்தது. அயர்லாந்துப் பிரச்சினையை ஆராய்ந்த மார்க்ஸ், ஆங்கிலத் தொழிலாளி வர்க்கம் கையோங்கி வந்தால் ஐரிஸ் அடிமைத்தனம் நீங்குமென முதலில் நம்பினார். ஆனால் பின்னர் அயர்லாந்தை விட்டுத் தொலைக்காதவரை ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கம் எதையும் சாதிக்க முடியாது...... இங்கிலாந்தில் ஆங்கிலேயப் பிற்போக்குவாதத்திற்கு மூலகாரணம் அயர்லாந்தை அடிமைப்படுத்தியது தான்' என்ற முடிவுக்கு வந்தார்.

ஏனெனில், காலணியாதிக்க நாடுகள் தமது நாட்டின் பாட்டாளிவர்க்கத்தில் ஒரு பகுதியைக், காலணிநாடுகளில் சுரண்டிய கொள்ளைப் பணத்தினால் விலைக்கு வாங்கிச் சலுகை பெற்ற பிரபுத்துவப் பிரிவொன்றைப் பாட்டாளிவர்க்கத்தினுள்ளேயே உருவாக்கியது; அதன் உதவியுடன் பாட்டாளிவர்க்க இயக்கத்தைச் சீர்குலைத்து வந்தது.

இக்காரணத்தினாலேயே மார்க்ஸ் 'பிறதேசிய இனங்களை ஒடுக்குகின்ற எந்த ஒரு தேசிய இனமும் சுதந்திரமாய் இருக்க முடியாது' என்று ஆணித்தரமாய் வலியுறுத்தினார். இக்காரணத்தினால், தனது சொந்த விடுதலைக்காகவுங்கூட ஆங்கிலத் தொழிலாளிவர்க்கம் அயர்லாந்து பிரிந்துபோகும் உரிமையை ஆதரித்துத் தன்நாட்டில் கிளர்ச்சி செய்ய வேண்டுமென மார்க்ஸ் வலியுறுத்தினார்.

இவ்வாறு மேற்கு ஐரோப்பிய நாடுகளின் தொழிலாளி வர்க்க இயக்கங்களின் அனுபவம் புகட்டிய பாடத்திலிருந்து, லண்டனில் 1896இல் கூடிய 'சர்வதேச சோஷலிஸ்டுக் காங்கிர'ஸ் சுயநிர்ணய உரிமையை, அதாவது அடக்கப்படுகின்ற தேசிய இனங்கள் அரசியல் ரீதியில் பிரிந்து சுதந்திரமான தேசிய அரசுகளை உருவாக்கும் உரிமை உடையன என்பதை அங்கீகரித்தது.

இதன் அர்த்தம் ஒவ்வொரு சிறு தேசிய இனமும் எப்போதும் பிரிந்து தனிஅரசை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்பதல்ல. 'சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது ஒரு விஷயம், குறித்த சூழ்நிலைகளின் கீழ் ஒரு தேசிய இனம் பிரிந்து செல்வது சரியா தவறு என்பது வேறு விஷயம்' என்றார் லெனின்.

இப்போது சும்மா மென்றுகொண்டிருந்த சந்தர்ப்பவாதிகளின் வாய்க்கு அவல் கிடைத்தது போல் ஆகிவிட்டது. 'அப்படியென்றால் சுயநிர்ணய உரிமை செயல் பூர்வமில்லாதக்' கொள்கை தானே? என அவர்கள் கெக்கலித்தார்கள்.

## மாக்ஸிஸவாதிகள் பிரிவினைவாதிகளா?

''ஒவ்வொரு தேசிய இனத்தின் விஷயத்திலும் தனியே பிரிந்து போகும் பிரச்சனைபற்றி' 'சரி' அல்லது 'இல்லை, பதிலளிக்க வேண்டுமென்று கோருவது மிகச் செயல் பூர்வமான ஒன்றாகத் தோன்றலாம் உண்மையில் அது அபத்தமானதே ஆகும். தத்துவார்த்த ரீதியில் அது நிலபியல் வாத வகைப்பட்டது! நடைமுறையிலோ அது முதலாளித்துவத்தின்கொள்கைக்கு பாட்டாளி வர்க்கத்தைகீழ்ப்படுத்துகிறது முதலாளி வர்க்கம் தனது தேசியக் கோரிக்கைகளுக்கு எப்போதுமே முதலிடம் அளிக்கிறது. அதையும் ஒரு உறுதியான நிபந்தனையற்ற முறையில் செய்கின்றது. ஆனால் பாட்டாளிவர்க்கத்துக்கோ வர்க்கப் போராட்டத்தின் நலன்களுக்கு கீழ்ப்பட்டவைதான் இக்கோரிக்கைகள். தத்துவார்த்தரீதியில் பார்த்தால் முதலாளித்துவ ஜனநாயக புரட்சியானது ஒரு குறிப்பிட்ட தேசிய இனம் இன்னொரு தேசிய இனத்தில் இருந்து பிரிந்து போவதில் முடியுமா என்பதை முன்கூட்டியே யாரும் சொல்லமுடியாது. முடிவு இரண்டில் எதுவானாலும் தனது வர்க்கத்தின் அபிவிருத்திக்கு வழிசெய்வதுதான் பாட்டாளி வர்க்கத்துக்கு முக்கியமானது. முதலாளி வர்க்கத்துக்கோ தன்னுடைய சொந்த தேசிய இனத்தின் குறிக்கோளை பாட்டாளிவர்க்கத்தின் குறிக்கோளுக்கு முந்தியதாக வைத்து இந்த அபிவிருத்தியை தடைசெய்யவேண்டுமென்பதுதான் முக்கியம். எனவேதான் பாட்டாளிவர்க்கமானது எந்த தேசிய இனத்துக்கும் உதகரவாதம் அளிக்காமல், இன்னொரு தேசிய இனத்துக்கு பாதகமான முறையில் எதையும் செய்வோமென்று உறுதி கூறுமல் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டுமென்ற எதிர்மறையான கோரிக்கையுடன் மட்டும் தன்னை நிறுத்திக் கொள்கின்றது என்றார் லெனின்.

இவ்வாறாகப் பிரிந்து செல்லும் உரிமையை வலியுறுத்திய அதேவேளை, பாட்டாளி வர்க்கம் ஒரு போதுமே தேசிய வாதத்தால் ஆட்கொள்ளப்படலாகாது என்பதையும் லெனின் வலியுறுத்தி வந்தார். அவர் சோஷலிச இயக்கத்தின் பொது நலனைக் கருதி பல்வேறு தேசிய இனங்களின் மத்தியில் உள்ள பாட்டாளிகளிடையே வர்க்க ஐக்கியத்தையும் வெகு ஜனங்களிடையே நல்லுறுவையுமே பிரதானப்படுத்தினர். இனங்களிடையிலான சமூக உறவு குலைக்கப்படும் எந்த 'ஒரு நடவடிக்கையையும் அவர் பொறுத்துக்கொண்டது இல்லை அவர் கொடிய இன அடக்குமுறையை வெறுத்த அதேவேளை குறுகிய தேசிய வாதத்தையும் கண்டித்தார்.

குறுகிய தேசியவாதப்பிரிவினையை வலியுறுத்தி அது வர்க்கப் போராட்டாரத்தின் நலன்களுக்கு கேடு விளைவிப்பதாகவும் உள்ள நிலைமைகளில் பிரிவினையை வன்மையாகக் கண்டித்தார் லெனின். இத்தகைய பிரிவினைக் கோரிக்கையை எதிர்க்கின்றபோது லெனின் மாக்சின் முன்மாதிரியைப் பின்பற்றினர்

மாக்ஸ் 1848 செக் மக்களின் பிரிவினை இயக்கத்தை எதிர்த்தார். அதனை மாக்ஸ் எதிர்த்தது தேசிய இனங்களின் எழுச்சிகளை ஆதரிக்கும் அவரது இலட்சியத்துக்கு முரண்பாடானதா? இல்லை! அன்றைய ஜனநாயகத்துக்கான போராட்டம் எதேச்சதிகார ஜாரிசத்துக்கு எதிரான போராட்டமாக இருந்தது. இதற்கு மாறாக செக் மக்களின் இயக்கம் ஜாரிசத்தின் பின்புலனாக அமைந்து இருந்தது இக்காரணத்தினாலேயே அது எதிர்க்கப்பட்டது மாக்ஸ், வெவ்வேறு ஸ்தல தேசிய இயக்கங்களை வெவ்வேறு முறையில் பார்த்தபோது ஒரே ஒரு சோசலிச கண்ணோட்டத்தையே—முரணற்ற பாட்டாளிவர்க்க கண்ணோட்டத்தையே கொண்டிருந்தார்.

அக்கண்ணோட்டத்தினின்றும் மாறுபடாமல் தேசிய எழுச்சிகளை சீர்தூக்கிப் பார்த்த மாக்ஸ் முதலாளித்துவப் ஜனநாயகப் புரட்சியின் வெளிப்பாடான தேசியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றையும் உலகப்பொது ஜனநாயக கோரிக்கையின் சிறு பகுதியாகக் கருதினர்.

அவருடைய மறைவுக்குப்பின் 19நூற்றாண்டின் முடிவுடன் பாரிய மாற்றம், சாப்த மாற்றம் ஒன்று தோன்றியது, அப்போதுதான் ஏகாதிபத்தியம் உலக அரங்கில் தோற்றம் பேறலாயிற்று இந்த மாற்றப்போக்கைத் தொடர்ந்து முதலாளித்துவத்தின் உச்ச கட்டமான ஏகாதிபத்தியம் தோற்றம் பெற்றதுடன் புதிதாக தோற்றம் பெற்ற தேசிய எழுச்சிகளுக்கு தலைமை தாங்கும் தகுதியை புதிய தேசங்களும் முதலாளி வர்க்கமும் இழந்துவிட்டது. அதுவர்க்க உணர்வு பெற்ற பாட்டாளி வர்க்கத்தின் அமைப்பு ரீதியான வளர்ச்சியைக்கண்டு அஞ்சிப் புரட்சியினால் வீழ்த்தப்பட வேண்டிய பிற்போக்குச் சக்திகளுடன் தன் முந்தோரைக காட்டிலும் அதிகமாகவே சமரசம் செய்துகொள்ளத் தொடங்கியது. இப்போக்கினை முதலாம் உலக யுத்தம் மேலும் வளர்த்துவிட்டது.

இதேவேளை பாட்டாளி வர்க்கம் 'தன்னுள் ஒரு வர்க்கமாக' இருந்த நிலையிலிருந்து முன்னேறித் 'தனக்கான வர்க்கமாக' வளர்ச்சி யடைந்து ஸ்தாபன ஒழுங்கமைப்பில் உருக்குஉறுதிபெற்று வரலாறு தனக்களித்த கடமையைக் கையேற்றுப் புரட்சியின் தலைமைப்பாத்திரத்தை வகிக்கத் தொடங்கியது. பாட்டாளி வர்க்கப் புரட்சியின் சோஷலிஸப் புரட்சியின் சகாப்தம் தோன்றிவிட்டது. அப்புரட்சியின் தொட்டிலாக ருஷ்யா மிளிர்ந்தது. உலகின் முதலாவது சோஷலிஸ அரசு 1917ல் உருவானது.

இனி சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை ஜனநாயக இயக்கத்தின் சோசலிஸ இயக்கத்தின் பகுதியாகும். இது பிரமாண்டமான மாற்றமொன்றின் விளைவாக உருவான புதிய சகாப்தத்தின் அதி முக்கியத்துவம் பெற்ற ஒரு அம்சமாகும்,

இப்புதிய சகாப்தத்தில்—அதாவது, ஏகாதிபத்தியத்தினதும் பாட்டாளிவர்க்கப் புரட்சியினதும் சகாப்தத்தில் மார்க்ஸிசம் லெனின் அவர்களால் கையேற்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு, வளர்த்தெடுக்கப்பட்டது. இவ்வாறு மார்க்ஸிசம் மேலும் செழுமைப்படுத்தப்பட்டு போர்க்குணம் மிக்க பாட்டாளி வர்க்கத்தின் கரங்களிலே மார்க்ஸிஸம்—லெனிஸம் எனும் சித்தாந்த ஆயுதமாக மிளிர்ந்தது.

லெனினிஸம் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக சர்வதேசப் பாட்டாளிவர்க்கத்தின் வெற்றிக்கு எது சாத்தியமோ அதைச் செய்வது, ஒடுக்கப்படும் தேசம் பிரிந்து செல்வதாவது ஏகாதிபத்தியச் சங்கிலியின் ஒரு கண்ணியைத் தகர்க்குமாதலால் பிரிந்து செல்வதை அங்கீகரிப்பது என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

ஒடுக்கப்பட்ட தேசங்களின் போராட்டம் சோஷலிஸத்துக்கான பாட்டாளிவர்க்கத்தின் போராட்டத்திற்குச் சார்பானது என்று லெனினிஸம் வலியுறுத்துகிறது. இதனாலேயே மார்க்ஸ்— ஏங்கெல்ஸ் ஆகியோர் 'கம்யூனிஸ்ட் அறிக்கை'யில் எழுப்பிய 'உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்' என்ற கோஷத்தை லெனின் 'உலகத்தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட தேசங்களே ஒன்று சேருங்கள்' என்று முன்வைத்தார்.

இக்கோஷம் ஒடுக்கும் தேசிய இனத்தின் மத்தியிலுள்ள பாட்டாளி வர்க்கத்தினதும் ஒடுக்கப்படுகின்ற தேசிய இனத்தின் மத்தியிலுள்ள பாட்டாளிவர்க்கத்தினதும் ஐக்கியத்தையே முதன்மைப்படுத்துகின்றது என்பது கூறாமலே விளங்கும், இந்த ஐக்கியத்தை எப்படி ஏற்படுத்த முடியும்? 'ஒரு புத்தகத்தின் ஒரு பக்கத்தின் மையத்திலுள்ள ஒரு இடத்துக்கானபாதை ஒரு ஓரத்திலிருந்து இடமாகவும் எதிர் ஓரத்திலிருந்து வலமாகவும் எப்படி இருக்கிறதோ அதே போலத்தான்' ஏற்படுத்தப்படவேண்டும் மென்றார் லெனின்,

அதாவது ஒடுக்கும் இனத்தின் மத்தியிலுள்ள பாட்டாளிவர்க்கத்தின் முன்னணிப் படை 'பிரிந்துபோகும் உரிமையை' வலியுறுத்தியும், ஒடுக்கப்படும் இனத்தின் மத்தியிலுள்ள பாட்டாளிவர்க்கத்தின் முன்னணிப்படை 'ஐக்கியமுறும் உரிமையை' வலியுறுத்தியும் தத்தமது மக்கள் மத்தியில் பிரசாரம் செய்யவேண்டும், இவ்வாறாக 'ஒடுக்கும் இனத்தைச் சேர்ந்த சமூக—ஜனநாயகவாதிகள் 'பிரிந்து போகும் உரிமையை வலியுறுத்துவதும் அதேசமயம் ஒடுக்கப்படும் தேசிய இனத்தைச் சேர்ந்த சமூக—ஜனநாயகவாதிகள் 'ஐக்கியமுறும் உரிமையை' வலியுறுத்துவதும் 'முரணானவை' என்று பிரச்சினையை நன்கு கவனிக்காதவர்கள் நினைக்கிறார்கள், எனினும் சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் இப்போதுள்ள இந்த நிலையிலிருந்து சர்வதேசியத்துக்கும், தேசிய இனங்களின் ஐக்கிய கலப்புக்கும் இட்டுச் செல்லும் பாதை இதைத்தவிர வேறெதுவும் இருக்க முடியாதென்பது விளங்கும் என்றார் லெனின்.

இவ்வாறு தேசிய இனங்களின் ஐக்கிய கலப்புக்காக உழைப்பது அதாவது சர்வதேசப் பாட்டாளிவர்க்க கலாச்சாரத்துக்காக உழைப்பது ஒவ்வொரு தேசிய இனத்தின் மத்தியிலுள்ள பாட்டாளி வர்க்கத்தின் கடமையாகும். ஏனெனில் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் ஐக்கியத்துக்கான பொருளாதாரக்காரணி ஏகாதிபத்தியத்தினால் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டு விட்டது. ஏகாதிபத்தியமானது முன்னேறிய நாடுகளின் மூலதனம் போட்டிக்குப் பதிலாக ஒன்றிணைத்து ஏகபோகத்தை நாட்டித் தன் தாய்த்திருநாடுகளிலே சிறு மூலதானங்களை அழித்து விழுங்கி ஏப்பம் விட்டுப் பல்கிப் பெருகி ஏகபோக மூலதனம் தேசிய எல்லைக்கு அப்பால் ஏற்றுமதி செய்யப்பட்டதன் விளைபொருளாகும் ஆகையால் தேசிய எல்லைகளைத் தகர்த்ததன் வாயிலாக ஏகாதிபத்தியமானது பாட்டாளிவர்க்கம் பொது எதிரியான தனக்கெதிராக அணிவகுத்து ஐக்கியப்பட வகை செய்துள்ளது. அதாவது சோஷலிஸத்தை அடைவதற்கான புறநிலை முதநிலைகள் அனைத்தையும் ஏகாதிபத்தியம் ஏற்படுத்திவிட்டது.

மிகுதி அடுத்த இதழில்

# பாரதி பற்றிய சில மதிப்பீடுகள்

ஜெ

நம் சமுதாயம் மிகவும் சீரழிந்து விட்டதுதான், என்ருலும் சில 'அதிநவீன' இலக்கிய வீரதீரப் பேர்வழிகளிடம் பாரதி முற்போக்குவாதி என்று அத்தாட்சிப் பத்திரம் வாங்கவேண்டிய நிலைக்கு அது இன்னும் சீரழிந்து விடவில்லை. நாங்கள் அதிஸ்டசாலிகள்தான்.

பாரதி முற்போக்குவாதி என்று தனக்குத்தானே முத்திரை குத்திக் கொள்ளவும் இல்லை. தான் ஒரு புரட்சிவாதி எனக் கூறிக் கொண்டு ஏமாற்றிப் பணம் சேர்க்கவும் இல்லை, இன்று பாரதி உயிருடன் இருந்து அன்று எழுதிய சமுதாயப் பார்வையிலேயே எழுதியிருந்தாலும் கூட பாரதி இன்றுள்ள பல 'அதி முற்போக்கு' இலக்கியவாதிகளை விட எல்லாவகைகளிலும் உயர்ந்த ஒருவராகத்தான் இருந்திருக்கமுடியும்,

சமுதாயம் என்னவோ பெருமளவும் முட்டாள்களைக் கொண்டது, தாங்கள் மட்டுமே மேதாவிகள் என்று நினைத்துக்கொண்டு சிலர் மற்ற எல்லாருக்கும் பிற்போக்குமுத்திரை குத்திக் கொள்வதால் யாரும் ஏமாறப் போவது இல்லை. இவர்கள் வேண்டுமென்ருல் தமக்குள்ளேயே மீண்டும் மீண்டும கூடிநின்றுகூவிப் பிதற்றுவதாக இருப்பின் விப்பிதற்றிக் கொள்ளட்டும் ஆனல் இவர்கள் தங்கள் கண்களை இறுக மூடிக் கொள்வதால் உண்மைகள் மறைந்து விடப்போவதில்லை.

பாரதி பற்றி மாக்ஸிஸ—லெனினிஸக் கண்ணேட்டம் என்னாருக இருக்க முடியும் என்பதை விளங்கிக் கொள்வதன் மூலம் நம்மால் போலிப் புரட்சிவாதிகளை இனங்காண முடிவதுடன் சமுதாயத்தில் இலக்கிய வாதியின் பங்கு பற்றி மேலும் தெளிவு பெறவும் முடியும்.

## காலமும் கருத்தும்

எந்த ஒரு காரியமோ கருத்தோ முற்போக்கானதா இல்லையா என்பது அது நிகழும் அல்லது தோன்றும் காலத்தையொட்டியே மதிப்பிடப்பட வேண்டும். அதுமட்டுமன்றி மனிதசமுதாயத்தின் ஒரு சீரற்ற வளர்ச்சியை மனதில் கொண்டால், சம காலத்திலேயே வெவ்வேறு நாடுகளில் சரியானவையும் முற்போக்கானவையுமாகக் கருதப்படும் காரியங்களிடையே பெரும் வேறுபாடுகள் இருக்கக் காணலாம்

முற்போக்கான காரியம் என்பது, அதன் காலத்துக்கு ஏற்ற ஒன்று எனும்போது நாம் ஒருகாரியம் அது நிகழும் காலகட்டத்துடன் அது எவ்வளவு பொருந்துகின்றது என்று கவனிக்க முனைகிறோம். சமுதாயம் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கால கட்டத்தில் உள்ளபோது அதனைப் பின்னேக்கித் தள்ளவோ அதன் வரலாற்று வளர்ச்சியை மறித்து நிற்கவோ முனையும் காரியங்களை நாம் பிற்போக்கான காரியங்களெனக் கருதுகிறோம் அதேசமயம் சமுதாயத்தை அதிவேகமாக முன்னேக்கித் தள்ள முனையும்போக்கில் சமுதாயத்தின் யதார்த்த நிலையைக் கணிப்பில் எடுக்காத காரியங்களையும் நாம் இறுதி ஆராய்வில் பிற்போக்கான காரியங்களாகவே கருதுகிறோம், தவழும் குழந்தை தவழவும் கூடாது என்பதும், தவழலாம் நிற்கவோ நடக்கவோ கூடாதென மறிப்பதும் தவறு. அதேபோல குழந்தை ஓடவேண்டும் என்று சொல்லி அதனைத் தரதரவென்று இழுத்து ஓடச்செய்யமுனைவதும் தவறு. இரண்டுமே குழந்தையின் விருத்திக்குத் தீங்கானவை, குழந்தை ஓடவேண்டும் என்பது உண்மை ஆனல் அதற்கு முன் நிற்கவும் அடி எடுத்து வைத்து நடக்கவும் வேண்டும் ஓடச் செய்து குழந்தையின் காலை முறிப்பவர்கட்கும் குழந்தையை எழுந்து நிற்காமல் மறிப்பவர்கட்கும் இடையே ஒட்டு மொத்தத்தில் அதிகம் வேறுபாடில்லை?

இவ்வாறே கருத்துக்களும் குறிப்பிட்ட சமுதாயக் சூழலில் நடைமுறைப்படுத்தவும் ஏற்றுக்கொள்ளவும் சாத்தியமானவையாக இல்லாதபட்சத்தில் தோற்றத்தில் அவை எவ்வளவு முற்போக்கானவையாக இருந்தாலுகூட நடைமுறையில் பயனற்றனவாகி விடுகின்றன. அல்லது அவற்றை நடைமுறைப்படுத்த முனைவதின் மூலம் சமுதாய மாற்றத்தைப் பின்னேக்கியே உந்த முனைவனவாகி விடுகின்றன.

## புரட்சியும் சீர்திருத்தமும்

சமுதாயத்தின் குறைபாடுகளை எல்லாம் நீக்குவது தனித்தனிச் சீர்திருத்தங்களால் சாத்தியம் இல்லை. அடிப்படையான சமுதாய மாற்றமே அவற்றைச் சாதிக்க வல்லது என்று புரட்சிவாதிகள் உறுதியாக நம்புகின்றனர். ஆனல் சமுதாய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் சமயத்தில் புரட்சிவாதிகள் அவற்றை எதிர்ப்பதில்லை, மாருக சீர்திருத்தங்கள் மூலம் சமுதாயத்தை மாற்றலாம் என்று புரட்சியைச் சீர்திருத்தத்தால் பிரதியீடு செய்யும் முயற்சியையே புரட்சிவாதிகள் எதிர்க்கின்றனர். ஒவ்வொரு சமுதாய சீர்திருத்தத்தையும் வரவேற்கும் சமயம் அவற்றின் முழுமையற்ற தன்மையையும் குறைபாடுகளையும் பிரச்சனைகளையும் மக்களுக்கு விளக்கவும் புரட்சிவாதிகள் கடமைப்பட்டுள்ளார்கள். இக்கண்ணேட்டம் அடிப்படையில் சரியானதும் மக்கள் மத்தியில் புரட்சிவாதிகளது செல்வாக்கை வளர்க்க உதவுவதுமாகும்.

புரட்சியிலிருந்து மக்களைத் திசை திருப்பும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்களின் மேலோட்டமான தன்மையும் அடிப்படை நோக்கமும் பற்றித் தாட்சண்யமின்றி விமர்சிக்க புரட்சிவாதிகள் கடமைப்பட்டுள்ளனர். அதேசமயம் சமுதாயத்தில் ஏற்படும் விழிப்புணர்ச்சியின் நிர்ப்பந்தத்தால் ஏற்படும் சீர்திருத்தங்களையும் சரியாக இனங்காண வேண்டிய அவசியம் அவர்கட்கு உள்ளது. வெகுஜனங்கள் தம் அனுபவ மூலமே படிப்படியாக புரட்சிப் பாதையை நோக்கி வருகின்றனர். அவர்களை ஒரே நாளில் வென்றெடுக்க முடியும் என நினைப்பவர்கள் அவர்களைக் களிமண் பொம்மைகளாகக் கருதுபவர்களாகவே இருக்க முடியும்.

சமுதாயச் சீர்திருத்தங்கள் அப்படியே புரட்சிக்கு விரோதமானவை என்று நினைப்பவர்கள் கம்யூனிஸத்துக்கும் மனிதாபிமானத்துக்கும் இடையிலான அடிப்படையான உறவை உணராதவர்களாகவே இருக்க வேண்டும்.

## தேசியமும் சர்வதேசியமும்

ஏகாதிபத்தியத்தால் ஒடுக்கப்பட்ட காலனித்துவ அடக்குமுறைக்குட்பட்ட சுரண்டப்படும் நாடுகளின் மக்களது தேசிய உணர்வு, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துடன் பகைமுரண்பாடுடையதல்ல. மாருக பாட்டாளி வர்க்கப் போராட்டத்துக்கு ஆதரவானவையாகவே காலனித்துவ விரோத ஏகாதிபத்திய விரோத, தேசிய விடுதலைப் போராட்டங்கள் கருதப்படுகின்றன.

தேசிய உணர்வு சர்வதேசிய உணர்வுக்குப் பகைமுரண்பாடான சூழ்நிலைகள் உண்டு, அதன் உதாரணங்களாக ஹிட்லரின் ஜேர்மனியும், ஜப்பான் பேரரசும் 2-ம் உலக யுத்தத்தின் போது விளங்கின. அமெரிக்காவினது தேசியவாதம் ஏகாதிபத்யச் சுரண்டலையும் ஒடுக்கு முறையும் நியாயப்படுத்தும் தேசியவாதமாக உள்ளவரை அது பிற்போக்கான தேசிய வாதமே. எனவே சுரண்டல்கார நாடுகளில் ஆளும்வர்க்கங்கள் பேணி வளர்க்கும் தேசிய வாதமும் ஏகாதிபத்தியத்தால் சுரண்டப்பட்டு ஒடுக்கலுக்குட்பட்ட மக்களது தேசியவாதமும் அடிப்படையிலேயே வேறு பட்ட விஷயங்கள் ஆகும்.

## மதமும் மார்க்ஸிஸமும்

மதம் மக்களின் அபினி என்று மார்க்ஸ் கூறியது உண்மை, மதங்கள் மனிதனது சமுதாய உணர்வை மழுங்கடிக்கும் ஆயுதங்களாகப் பயன்படும் நிலையில், முக்கியமாக அவை பிற்போக்கு சக்திகட்கு ஆதரவான ஸ்தாபனப்படுத்தப்பட்ட மத பீடங்களால் பிரயோகிக்கப்படும் நிலையில் மனிதனைத் திட்டமிட்டே மத போதையால் திசைதிருப்பும் சக்திகளை மார்க்ஸ் வன்மையாகக் கண்டித்தார். ஆனல் மதம் பற்றிய கம்யூனிஸ்ட் நிலைப்பாடும் நாஸ்திக நிலைப்பாடும் வேறுபட்டவை. கம்யூனிஸ்டுகள் அடிப்படையில் மத நம்பிக்கை அற்றவர்கள், ஆனல் மத சுதந்திர விரோதிகள் அல்லர். மத நம்பிக்கைக்கும் வழிபாட்டுச் சுதந்திரத்துக்கும் அவர்கள் எதிரிகளும் அல்லர். அவர்கள் வேண்டி நிற்பது மத நம்பிக்கை அற்றவர்களுக்கு வழிபடாமைக்கு சுதந்திரமே. அரசும் பிறஸ்தாபனங்களும் மதத்தை மக்கள்மீது திணியாமல் இருக்கவும் மக்களில் எவரேனும் சுயாதீனமாக ஒரு மதத்தை ஏற்கவோ எல்லா மதங்களை

7-ம் பக்கம் பார்க்க

## அட்டனில் பாரதிவிழா

தேசிய கலை இலக்கிய பேரவையின் மலையகக் கமிட்டியும், இலங்கை தேசபக்த வாலிபர் இயக்கத்தின் மலையகக் கமிட்டியும் இணைந்து நடந்த 10-10-82ல் அட்டன் நகரசபை மண்டபத்தில் பாரதி நூற்ருண்டு விழாவை வெகு சிறப்புடன் நடத்தின பெரும் தொகையான தொழிலாளர்கள், இளைஞர்கள், மாதர்கள் கலந்து கொண்ட இவ்விழாவில் கருத்துரைகள், கலைநிகழ்சிகள் இடம்பெற்றன. விழாவில் பேராசிரியர் எஸ்: சிவசேகரம், தோழர் கே செந்திவேல் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். மலையக செந்தென்றல் இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சியுடன் விழா முடிவுற்றது.

# கலை இலக்கிய அரங்கம்

## பஞ்சமருக்கு ஒரு கடிதம்

கே. டானியல் என்பவரது, பஞ்சமர் நாவல் பற்றி செம்பதாகை 8-ம், 9-ம் இதழ்களில் வெளிவந்த இரண்டு விமர்சனங்களையும் மிக உன்னிப்பாகப் படித்தவர்களில் நானும் ஒருவன். அதேவேளை பஞ்சமர் நாவலையும் படித்தேன். நாவலைப் படித்து முடித்தபோது, அந்த நாவல் தாழ்த்தப்பட்ட மக்களின் கடந்த காலப் போராட்டங்களை திரிவுபடுத்தியுள்ளது, கொச்சைப் படுத்தியுள்ளது என்ற செம்பதாகையின் விமர்சனம் நூற்றுக்கு நூறு வீதம் சரியானது என்பதை என்னுல் மட்டுமல்ல ஏனைய மக்களாலும் ஏற்றுக்கொள்ளக் கூடியது என்பதையும் உணர்ந்தேன்.

பஞ்சமர் வெறும் இலக்கியந்தானே என்றுமட்டும் கூறினல் அதை ஒரு மூலையில் வீசிவிட்டுப் போகமுடியும், ஆனல் அது இலக்கியம் என்ற பெயரில் தாழ்த்தப்பட்ட மக்களின் உண்மையான போராட்ட இயக்கங்களை மூடி மறைத்து மிகக்கொடிய நச்சுக் கருத்துக்களை கொண்டிருப்பதால் அதற்கு ஆயிரம் அடிகள் கொடுக்கும் விமர்சனங்கள் கூடப் போதாதவையாகும் என்பதே என் கருத்து.

''எங்களுடைய காரியங்களை நாங்கள்தான் வெல்ல வேண்டும். எங்களுடைய எதிரிகள் மிகவும் வல்லமையுடையவர்கள். நாங்கள் தியாகங்கள் செய்தால்தான் அவர்களை வெல்லலாம், எங்கள் உரிமைகளை நாங்கள்பெற எத்தனிக்கும்போது அவர்கள் மனமாறித் தரமாட்டார்கள். அவர்களிடம் பலம் இருக்கிறது. அதனல் எல்லாவற்றையும் நாங்கள் திட்டமிட்டுச் செய்யவேண்டும்''— பக்கம் 254, இவ்வாறு சங்கானையில் இருந்து வந்த நிச்சாமச் சண்முகத்தார் என்ற பாத்திரம் பேசுகிறது.

இக்கருத்தை மறுத்து கணேசன் என்ற பாத்திரம் பின்வருமாறு பேசுகிறது. ''நிச்சாமச் சண்முகத்தார் சொன்னதை நான் ஒத்துக்கொள்ள மாட்டன். அவர்கள் பலமுள்ளவர்கள் என்று நினைக்கிறது பெரும் பிழை. அவங்களும் அவங்கடை சண்டியரும் வெறும் கடதாசிப் புலிகள். எங்கடை ஊருக்கு போட்டிக்கு நாத்து நட கொடியாமத்துச் சண்டியன் முருகேசுவின்ர துண்டுதலோடை வந்தினம். நாங்கள் தடியைப் பொல்லை எடுத்துக் கொண்டு சண்டைக்குப் போகவில்லை. இரண்டு சுவரிலை எழுதினம். மையாலைகூட எழுதேல்லை—கரித்துண்டுகளாலைதான் எழுதினம். 'கொடியாமத்துச் சண்டியன்களே தலைகள் பத்திரம்' மந்துவில் ரத்தினத்தைக் கொண்டவர்களே பழிக்குப் பழி வாங்கப்படுவியள்' எண்டு எழுதினம் அதோடை எல்லாம் அடங்கிப்போய் ஓடிப்போட்டாங்கள். அவங்கள் பலசாலியள் எண்டு சொல்லுறது பிழை. சண்முகத்தாற்றை உந்தப் பேச்சை எடுக்கேலாது' பேச்சை முடித்துவிட்டு பக்கத்தே வந்திருந்த கணேசனின் தோளில் ஐயாண்ணன் தட்டிக் கொடுத்தார். பக்கம் 255.

மேற்ப இரு பாத்திரங்களின் கருத்துக்களையும் அதில்எந்தக் கருத்துக்கு நாவலின் கதாப்பத்திரமான ஐயாண்ணன் தோளில் தட்டிக்கொடுத்தார் என்பதையும் கடந்த காலங்களில் வாழ்வா அன்றி சாவா, என்றநிலையில் நின்று போராட்டங்களில் ஈடுபட்ட ஒரு போராளி உற்று அவதானிப்பது அவசியமென்றே நான் வற்புறுத்த விரும்புகின்றேன்.

எதிரியின் பலத்தையும் கணக்கில்கொண்டு தியாகங்களுக்கு அஞ்சாமல் திட்டமிட்ட போராட்டங்களை முன்னெடுக்கவேண்டும் என்ற நிச்சாமச் சண்முகத்தின் கருத்தை மறுத்து வெறும் கரித்துண்டால் சுவரில் சுலோகம் எழுதி தடி பொல்லு இன்றி வெள்வெருட்டு விட்டு சாதி வெறியர்களை அடக்கி உரிமைகளைப் பெறமுடியும் என்ற கணேசனின் கருத்துக்கே ஐயாண்ணன் தோளில்தட்டி உற்சாகம் கொடுக்கிருர் என்ருல் நாவல் ஆசிரியர் எந்த நிலையில் உள்ளார் என்பதை புரிந்துகொள்ள முடிகிறது அல்லவா?

கடந்த காலங்களில் சரியான அரசியல் தலைமை வழிகாட்டல் தந்திரோபாயம், ஸ்தாபன அமைப்பு என்பனவற்றை இறுகப்பற்றிய பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் வெற்றிமேல் வெற்றி பெற்றனர், இது வரலாறு அப்பகுதிகளுக்கும் இந்த பஞ்சமர் ஆசிரியருக்கும் ஒட்டுமில்லை உறவுமில்லை. ஆனல் அவரது தனிமனித விருப்பு வெறுப்புக்கும், வெள்வெருட்டுக் கொள்கைக்கும் ஆட்பட்ட சிலர் முன்னெடுத்த போராட்டங்கள் தோல்வி கண்டன. அதனல் இழப்புகளும் ஏற்பட்டன இதுவும் வரலாறு. எனவேதான் பஞ்சமர் தாழ்த்தப்பட்ட மக்களின் சரியான உண்மையான கொள்கை ரீதியான போராட்ட இயக்கங்களை கொச்சைப்படுத்தும் நச்சு இலக்கியம் எனக்கொள்வது முற்றிலும் நியாயமானதேயாகும்,

சங்கானை

சி. நல்லதம்பி

# சோவியத் பிடியிலிருந்து விலக இந்தியா விரும்புகிறது!

இந்தப் பகுதியிலே நாம் இரண்டொரு தடவைகள் சுட்டிக்காட்டியது போல, மிகச் சமீபகாலமாக இந்தியாவின் வெளிநாட்டுக்கொள்கையிலே சில மாற்றங்கள் தோன்ற ஆரம்பித்துள்ளன. அண்மையில் பிரதமர் இந்திரா காந்தி அமெரிக்காவுக்கு மேற்கொண்ட நல்லெண்ண விஜயமும் வேறுசில நடவடிக்கைகளும் இம்மாற்றத்தின் குறிப்பிடத்தக்க வெளிபாடுகள். குறிப்பாகச்சொல்லுவதானால்சுமார் இருபது வருடகாலமாக இந்தியா சோவியத் யூனியனுடன் கொண்டிருந்த நெருங்கிய 'உறவு' சற்று விரிசலடையத் தொடங்கியிருக்கிறது. அதன் மறுவலமாக அமெரிக்கா, சீன பிரான்ஸ் முதலிய தேசங்களுடன் இந்தியா கூடுதலான நட்புறவை வளர்த்துக்கொள்ள விரும்புவதாய்த் தெரிகிறது. இந்தியாவும் சீனவும் அண்மைக் காலத்தில் கூடுதலான இராஜதந்திர—பொருளாதார—கலாசார-தொடர்புகளை வளர்க்க முற்பட்டிருப்பதும், பல்வேறு மட்டங்களில் பரஸ்பரம் பயனுள்ள பேச்சு வார்த்தைகளை நடத்துவதும் பலரும் அறிந்ததே இது கண்ட சோவியத்யூனியன் சில மாதங்களுக்கு முன் தனது பாதுகாப்பு அமைச்சரைப் பெரும் பரிவாரத்துடன் இந்தியாவுக்கு அனுப்பி, யுத்த தளபாடங்களை மேலும் விற்பதற்கு முன்வந்ததையும் பலரும் அறிவர். எனினும் இந்திய வெளிநாட்டுக் கொள்கை மெல்ல மெல்ல சோவியத் பிடியிலிருந்து விலகிக் கொள்ள முயற்சிகள் எடுக்கப் படுவது வெளிப்படை. இது எதிர்பார்க்கக் கூடியதும், தர்க்கரீதியானதும் என்றே கருதவேண்டும்.

சோவியத்யூனியனும் அமெரிக்காவும் மட்டுமே உலகில் கணிக்க வேண்டிய சக்திகளாக இருந்த நேரு சகாப்தத்தில் இந்தியா சோவியத் யூனியனுடன் சில பல நெருங்கிய உறவுகளை ஏற்படுத்தியது. கால்நூற்றாண்டுக்குப் பின்னர் இன்று உள்ள உலக நிலைமை வேறு கடந்த கால்நூற்றாண்டில் சோவியத் யூனியன் மாபெரும் இராணுவ வல்லரசாக மாறியதும், ஏகாதிபத்தியப் போக்கில் தனது செல்வாக்கிற்குள் வைத்திருக்கக் கூடிய பிரதேசங்களையும் பகுதிகளையும் உலகின் பல இடங்களில் தேடமுனைந்ததும் உலகின் மிகப்பெரிய ஆயுத விற்பனையாளனாக மாறியதும், ஆயுத மயமாக்கப்பட்ட சோவியத்யூனியனில் பல்வேறு பொருளாதாரப் பிரச்சினைகள் தலைதூக்கியதும், இவையாவற்றின் காரணமாக சோவியத் யூனியன் கியூபா, வியற்நாம், எதியோப்பியா, ஜெர்மன் முதலிய சார்பு நடுகளைக் கொண்டு மூன்றுவது மண்டல நாடுகளைப் பிளவுபடுத்த முற்பட்டதும் உலக மக்கள் கண்ணில் சோவியத் யூனியனை சந்தேகத்துக்குரிய நாடாக வைத்துள்ளன. இந்நிலையில் இந்தியா தொடர்ந்தும் சோவியத் வட்டத்துள் செயற்படுவது இந்தியாவின் தேசிய நலனுக்கே குந்தகம்விளைவிப்பதாகும். இதனை உணர்ந்ததினுலேயே மிகச் சிரமமான 'ஒரு காரியத்தை இந்தியா நிதானமாகச்

— உதயன் —

செய்யத் துவங்கியுள்ளதும் பல்வேறு வழிகளின் இன்னமும் ருஷ்ய பிடியும் செல்வாக்கும் இந்திய அரசிலும் நிர்வாக பீடங்களிலும் பாதுகாப்புச் சேவைகளிலும் அழகாகப் பரவிபிருக்கிறது. கால நூற்றாண்டு அரவணைப்பை இலகுவில் உதறித்தள்ளுவது முடியுமா? ஆயினும் இந்தியா கூடுதலான நடுநிலைமையை வகிக்க முயல்வது கண்கூடு. பாகிஸ்தான், பங்களாதேஷ் முதலிய அயல் நாடுகளுடனான இராஜதந்திர உறவுகளைச் சீர்ப்படுத்தஇந்தியா எத்தனிப்பதும் இந்த முயற்சியின் ஓர் அம்சமாகும். அது மட்டுமல்ல இன்று இந்தியா புதிய சூழ்நிலைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுமுள்ளது. அரசியல் இராஜதந்திர, இராணுவ துறைகளில் அது பெரும் முன்னேற்றங்களைக் கண்டிருப்பினும், பொருளாதாரத் துறையில் அதல பாதாளத்திலேயே இருக்கிறது. அமெரிக்க செல்வாக்கில் உள்ள உலக வங்கியிடமிருந்து ஐயாயிரம் கோடி அமெரிக்க டொலர் அண்மையில் இந்தியா பெற்றமை குறிப்பிடத்தக்கது. ருஷ்ய யுத்த தளபாடங்கள் மாத்திரம் பொருளாதார அபிவிருத்திக்குப் போதாது. பலநாடுகளின் ஒத்துழைப்பும் நிதியுதவியும் தேவை, இத்தகைய நிர்ப்பந்தங்களும் தேவைகளும் எண்பதுகளில் புதிய கொள்கைகளையும் அணுகுமுறைகளையும் இன்றியமையாதன வாக்கியுள்ளன.

அமெரிக்காவுடன் மாத்திரமின்றி மூன்றுவது உலகநாடுகளுடனும் இந்தியா தனது உறவுகளையும், தோற்றத்தையும் நம்பகத்தன்மையையும் சீர்செய்ய வேண்டியிருந்தது. ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் சோவியத்யூனியனை ஆரம்பத்தில் கண்மூடித்தனமாக ஆதரித்தும் அவசரப்பட்டு வியற்நாமையும் அதன் கைப்பொம்மையாக உள்ள கம்பூச்சிய இராணுவ ஆட்சியை அணைத்துக்கொண்டதும், மூன்றுவது மண்டல நாடுகள் மத்தியில் இந்தியா பற்றி பல ஐயப்பாடுகளை எழுப்பின. இவற்றையெல்லாம் மனங்கொண்டே தற்சமயம் இந்தியா கூடுதலான நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடிக்க முயல்கிறது.

ஒரு கட்டத்தில் இந்தியா சோவியத் செல்வாக்குக் காரணமாகவும் உள்நாட்டு அரசியல் முரண்பாடுகள் காரணமாகவும் சீனவை பூதாகரமாகக்காட்டி வந்தது. இப்போழுது யதார்த்தத்தை 'உணர்ந்து சுமூகமான 'உறவுகளை வளர்க்க முற்படுகிறது, இதனை சீனமக்கள் குடியரசும் வரவேற்கிறது, விரும்புகிறது; பேச்சு வார்த்தைகளை என்றுமே சீனம் நிராகரித்ததில்லை.

சென்ற மாதம் இந்தியாவில் மற்றுமொரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது. புதிதாக இந்தியா—சீன சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்திரா காங்கிரசின சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரியர் என், ஜி. ரங்கா தொடக்கவுரை நிகழ்த்த கமலாபதிதிரிபாதி தலைமை வகிக்க இச்சங்கம் நல்லபடி உருவாகியுள்ளது. பி. பி, பாண்டா சங்கத்தின் தலைவர். இந்தியாவிலுள்ள சீனத்தூதுவர் சென ஜியான் தொடக்க வைபவத்திற்கு நல் வாழ்த்து தெரிவித்திருந்தார். இருபெரும் நாடுகளுக்கும் நாகரிகங்களுக்குமிடையில் சகோதர பூர்வமான நேசபாசத்தை வளர்ப்பதே சங்கத்தின் குறிக்கோள் என்று அமைப்பாளர்கள் அறிவித்துள்ளார்கள் இதுபெரும்பான்மை இந்திய மக்களின் அபிலாஷை என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. ★

# பாரதி பற்றிய மதிப்பீடுகள்

6-ம் பக்கத் தொடர்

யுமே நிராகரிக்கவோ சமுதாயத்தில் சுதந்திரம் இருப்பதையே கம்யூனிஸ்டுகள் வேண்டுகிறுர்கள்.

எந்த ஒரு மத நம்பிக்கையையும் சமுதாய வளர்ச்சிக்கும் மாற்றத்துக்கும் தடைக்கல்லாக நிறுத்தப்படாதவரை, சமுதாயத்தின் முக்கியமான முரண்பாட்டில் வெகுஜன விரோத சக்திகட்குச் சாதகமாக இலவாதவரை கம்யூனிஸ்டுகள் மதவாதிகளை எதிர்க்கும் அவசியம் இல்லை. இன்று சோசலிஸ சீனவில் உள்ள அளவு மதசமத்துவமும்சுதந்திரமும் உலகில் வேறெந்த நாட்டிலும் இல்லை என்று துணிவுடன் கூறலாம். அது மட்டுமன்றி ஒருவர் கம்யூனிஸ்ட் கட்சியுடன் பெருமளவு அரசியல்ரீதியாக உடன்பாடுடையவராக இருக்குமளவில் அவரது தனிப்பட்ட மத நம்பிக்கைகள் அவர்கம்யூனின்டுகளுடன் ஒத்துழைப்பதற்கோ அல்லதுஅவர் ஒரு முற்போக்கு சக்தியாகக் கருதப்படுவதற்கோ தடையாகஇராது.

## பாரதியின் வரலாற்றுப் பங்கு

பாரதியின் அரசியல் கம்யூனிஸ அரசியல் அல்ல. பாரதி ஒருதேசிய வாதி. பாரதி ஆழமான சமய நம்பிக்கையுடையவர். அவர் சமுதாய சீர்திருத்தில் மிகுந்த ஈடுபாடுடையவர் இதையெல்லாம் வைத்துக்கொண்டு யாராவது பாரதி பிற்போக்குவாதி என்று வாதிப்பதானுல் அவருக்கு மாக்ஸிஸமே தெரியாது என்று தான் கூறவேண்டும். பாரதி வாழ்ந்த காலமும் சமுதாய சூழ்நிலையும் இந்திய தேசிய விடுதலை இயக்கத்தில் தேசிய முதலாளித்துவம் ஆதிக்கம் செலுத்திய காமும் கம்யூனிஸ இயக்கம் ஆழமாக வேரூன்ருத சூழ்நிலையுமாகும். ஆனுலும் பாரதி கம்யூனிஸ விரோதி அல்ல. ரஷ்யப்புரட்சி பற்றி அறிந்தவுடனேயே அதை வியந்து பாராட்டினுர் "மாகாளி கண்வைத்தாள" என்ற வார்த்தையின் கவிதை நயம் தெரியாத மூடர்கள் அதில்கூட மதத்தைக கண்டு விட்டுப் போகட்டும். ஆனல அந்த வார்த்தைகள் ரஷ்யப் புரட்சிக்கு பாரதி கொடுத்த மதிப்பையே பிரதிபலிக்கின்றன.

இந்திய தேசிய இயக்கத்தில் பிரிட்டிஷாருக்குஎதிரான தீவிரவாத சக்திகளை பாரதி சார்ந்து நின்றது ஒரு முக்கியமான விஷயம், அவர் கட்டியெழுப்பிய தேசிய உணர்வை அவர் ஆதரித்த சக்திகளுடன் இணைத்துப் பார்க்கும்போது அவரது நிலைப்பாட்டுக்கும் சாத்வீகமாகப் போராடிய முதலாளித்துவ சார்பு சக்திகளுக்குமுடையிலான முரண்பாடு தெரியும். பாரதி கவிஞனாக பத்திரிகையாளனாக பிரச்சாரகனாக பிரிட்டிஷ்ாரை எதிர்த்து ஆற்றிய செயல்களை மறந்து அவரை மதிப்பிடுவது மிகவும் நேர்மையற்றதாகும்.

பாரதியின் மதநம்பிக்கை பழமை வாதம் சார்ந்த ஆசார முறையாளர்களாலும் சாதி வெறியர்களாலும் ஆதரிக்கப்படும் மத நம்பிக்கையல்ல. அதுமூடநம்பிக்கைகள் சாதிமுறை, பெண்ணடிமை போன்ற பலதீமைகளை துணிந்து எதிர்த்த சீர்திருத்தவாதியின் மதநம்பிக்கை. அது சமுதாய மாற்றத்தை எதிர்த்து நின்ற மத நம்பிக்கை அல்ல. மாருகப் புதிய சமுதாயம் ஒன்றை விரும்பி நின்ற, ஆனல் தன்சமுதாயச்சூழலின் தாக்கத்துக்குட்பட்ட விரிந்த கண்ணேட்டமுடைய ஒரு உயர்ந்த மனிதனின் மத நம்பிக்கை.

தானே ஒரு பிராமணனுக இருந்தும்கூட பிராமணர்களது சாதி வெறியை எதிர்க்கத் துணிந்து நின்றவரும், படித்த தென்னிந்திய பிராமணர்கள் பெருமளவும் பிரிட்டிஸ்ஷாரது கால் கைபிடித்து முன்னேறிய சூழ்நிலையில் பிரிட்டிஸாரைத் துணிந்து எதிர்த்தவருமான பாரதி அசகாரியங்கட்காகப் பல கஷ்டங்களை வாழ்வில் எதிர்நோக்கினுராலும் இறுதிவரை தன்நிலையில் தளரவில்லை என்பதை நாம் மறப்பதற்கில்லை.

## பாரதியும் புதிய தமிழ்இலக்கியமும்

கம்பருக்குப் பிறகு செத்துக்கிடந்த தமிழ்க் கவிதைக்குப் புத்துயிருட்டயது மட்டுமன்றி மிக அடக்கமாகவே எளிய தமிழில் உன்னதமான கவிதைகளைத் தரமுடியும் என்று காட்டி கவிதை இலக்கியத்துக்கும் எளிய தமிழுக்கும் ஒரே காலத்தில் புத்துயிருட்டியவர் பாரதி. பாரதியின் இலக்கியச் சாதனையைப்பற்றி இங்கு அதிகம் நீட்டி முழக்க வேண்டிய அவசியமில்லை. ஆனுல் தமிழ் இலக்கியத்தின் மறுமலர்ச்சிக்கு பாரதி அளித்த பங்கு முக்கியமற்றது என்று கருதுபவன் மாக்ஸிஸ வாதியானுல் அவன் கலை உணர்வற்ற மலட்டுத்தனமான ஒரு மாக்ஸிஸவாதி என்று தான் கூறவேண்டும். மலட்டுத்தனமான மாக்ஸிஸவாதி ஒரு மாக்ஸிஸவாதியே அல்ல. ஏனெனில்மார்க்ஸிஸம் மனித வாழ்க்கை பற்றிய ஒன்று அதன்முழுமையின் ஒவ்வொரு அம்சத்துடனும் உறவுடையது'

## பாரரதியும் போலிப் புரட்சிவாதிகளும்

புஷ்கின், ரொல்ஸ்ற்ருேய். துர்கனேவ் போன்ற பலரும் செகாவ் போன்று சமுதாயப் பிரக்ஞை மிகுந்தவர்களும் ரஷ்யப்புரட்சியுடன் நெருங்கி நின்ற கோர்க்கி போன்றவர்களுடன் வைத்துப் போற்றப் படுவதைப்பற்றியோ, லூசுன் பச்சையான சுலோகங்களை எழுதாத ஒரு எழுத்தாளர் என்பதையோ, சாள்ஸ் டிக்கன்ஸ், ஷேக்ஸ்பியர், மார்க்கு வெய்ன் போன்ற ஆங்கில அமெரிக்க எழுத்தாளர்களது படைப்புகட்கு சோசலிஷ சீனவில் நீண்டகாலமாகவே பெருமதிப்பு இருந்து வருகிறது என்பதையோ கண்களை இறுகமூடிக்கொண்டுள்ள நம் இலக்கியப் புரட்சிப் பூனைகளால் என்றுமே காணமுடியாது,

மார்க்ஸ் எங்கெல்ஸ் ஆகியோர் முதல் சிறந்த மாக்ஸிஸ சிந்தனையாளர்கள் பலரும் தம்முடன் பூரண உடன்பாடற்ற பிறரது சரியான கருத்துக்களையும், சாதனைகளையும் தாழ்த்தி மதிப்பிட்டதுகிடையாது. சரியான மார்க்ஸிஸ வாதிகள் உண்மைகட்குத் தாங்களே உடமையாளர்கள் என்று பீற்றிக்கொண்டு மற்றவர்களது கருத்துக்களை அப்படியே அலட்சியம் செய்பவர்களாக என்றுமே இருந்ததில்லை. சிறந்த மாக்ஸிஸ வாதிகள் நிறைகுடங்கள்; அவர்களுக்குத் தங்களை உயர்த்திக்கொள்ள மற்றவர்கள்மீது சேற்றை வீசும் அவசியமில்லை.

பாரதியைப் பிற்போக்கு வாதி என்றும் வேறு வகையிலும் இழிவு செய்ய முனைபவர்கட்கு அதன் மூலம் கொஞ்சம் விளம்பரம் கிடைக்கலாம். ஆனுல் விஷயமில்லாத விளம்பரம் பலநாள் நிலைக்காது. பாரதியை விற்று இலக்கிய வியாபாரம செய்யும் கும்பல்களில் இரண்டு வகை; ஒன்று பாரதிக்கு இல்லாத பெருமைகளை எல்லாம தந்து அவர் சொல்லாதவற்றை எல்லாம் சொன்னதாக்கும் ஒரு கூட்டம். மற்றது பாரதியைத் திட்டினுலாவது தங்களை யாராவது கவனிப்பார்கள் எனும் நம்பாசை உள்ள கூட்டம். மாக்ஸிஸ வாதிகட்கு இந்த அவசயம் எதுவுமே கிடையாது. அவர்களளவில் பாரதி தமிழ் இலக்கியத்திலும் இந்திய தேசிய வரலாற்றிலும் ஆற்றிய பணிகள் முற்போக்கானவையும் முன்னேடியானவையும் என்பதில் ஒரு தெளிவீனமும் இல்லை. பாரதியின் எல்லாக் கருத்துக்களையும் சரியானவை என்ருே, அன்றைய சூழலின் சரியான கருத்துக்கள் எக்காலத்துக்கும் பொருந்துவன என்ருே வாதித்து வழிபட வேண்டிய நிலையில் மாக்ஸிஸ வாதிகள் இல்லை, ஆனுல் அந்த உன்னதமான ஒரு மனிதனின் வரலாற்றுப் பங்கை நிராகரிப்பவன் ஒரு எதிர்ப் புரட்சிவாதி என்பதில் அவர்கட்கு சிறிதளவேனும் ஐயமில்லை.

★

## வரவேற்கப்படும்

பாரதி பற்றிய மதிப்பீடுகள் என்னும் இக்கட்டுரை மாக்ஸிஸ லெனினிவாதிகள் பாரதியை எவ்வாறு பார்க்கிருர்கள் என்பதை விளக்கு முகமாக அத்துறையில் ஈடுபாடுள்ள நண்பர் ஜெ எழுதியுள்ளார்—இது பற்றிய நண்பர்களின் கருத்துக்களும் செம்பதாகையில் வரவேற்கப்படும்.

[ஆ. குழு]

செய்திப்பத்திரிகையாகப் பதிவு பெற்றது

## தொண்டமான் - ஜே. ஆருக்கு வெற்றியாம்

# தோட்டத் தொழிலாளருக்கு என்ன கிடைக்கும்?

ஜனாதிபதித் தேர்தலில் ஜே. ஆர், ஜெயவர்த்தனவின் வெற்றி தொண்டமானின் வெற்றி எனக் கூறிப் பல இடங்களிலும் அவருக்கு வரவேற்புகள் நடத்தப்படுவதைக் காணமுடிகிறது, ஜே. ஆரின் வெற்றிக்காக தொண்டமான்-செல்லச்சாமி இ.தொ.காவினர் தமது சக்தி யாவற்றையும்பாவித்து வேலை செய்தனர் என்பது உண்மை. ஜே. ஆரையும் - யூ. என். பி. யையும் பற்றி அவர்கள் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் ஏதோ ஏதோ எல்லாம் எடுத்துக் கூறினர். தீர்க்கப்படாத நிலையில் விடப்பட்டுள்ள இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சனைகள் யாவும் ஜே. ஆர். காலத்திலேயே தீர்க்க முடியும் என்றும், அவர் ஒரு உயர்ந்த ஜனநாயகத் தலைவர் என்றும் அவரை மீண்டும் ஜனாதிபதியாக்கினால்தான் தோட்டத்தொழிலாளர்களின் வாழ்வில் விடிவு ஏற்படும் என்றெல்லாம் மேடை மேடையாக முழக்கமிட்டனர். இவர்கள் இவ்வாறு முழக்கமிட்ட வேளையில் கடந்த ஐந்துவருட கால யூ. என். பி. ஆட்சியில் ஜே. ஆர். தனதுநிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதிப் பதவியைப் பாவித்து எவ்வளவு உரிமைகளைச் சலுகைகளை தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கினார் என்பதுபற்றி எதுவுமே கூறவில்லை. தனக்கு மந்திரிப் பதவியும் தனது சகாக்கள் சிலருக்கு மாவட்ட சபை உறுப்பினர் பதவிகளும் கிடைத்ததைப் பற்றியே அதிகம் பேசினார் திரு, தொண்டமான்.

இப்பொழுது ஜே. ஆர், மீண்டும் வெற்றி பெற்றுவிட்டார் அதுவும் தொண்டமானின் அமோக ஆதரவுடன். அவருடைய ஆதரவுக்கு பிரதி உபகாரமாக மேலும் சில பாராளுமன்ற உறுப்பினர்பதவிகள், அரை மந்திரிப் பதவி ஒன்று, வேறும் சிலருக்கு உயர் நியமனங்கள நிச்சயம் கிடைக்கும் என்று அரசின் நெருங்கிய வட்டாரங்களில் பேசிக் கொள்ளப் படுகிறது. இது உண்மையாகவும் இருக்கலாம். ஆனால் நாம் சுட்டிக் காட்டுவது தோட்டத் தொழிலாளர்களுக்கு என்ன கிடைக்கும் என்பதேயாகும். சம்பள உயர்வு, மாதச் சம்பளம், சமசம்பளம் பிரசாவுரிமை 402 ஆசிரியர் நியமனம், காணி வழங்கல் போன்ற லட்சக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை ஜீவாதாரப் பிரச்சினைகளுக்கு ஜே. ஆரும் — தொண்டமானும் என்ன பரிகாரம் தேடப்போகிறார்கள், இப் பிரச்சினைகள் பற்றி இதுவரை எந்த வாக்குறுதியையும் கொடுத்ததாகவும் தெரியவில்லை. பொதுப் படையான சொற்றொடர்கள் மட்டுமே அதுவும் பத்திரிகைகள் வானொலியில் கூறப்படுகிறதே அன்றி நேரடியாக உரிய எவருமே எதையும் கூறாது உள்ளனர்.

இதிலிருந்து ஒன்றைத் தெளிவாக காண முடியும். கடந்த ஐந்து வருடங்களில் தோட்டத் தொழிலாளருக்கு உருப்படியாக எந்தப் பிரச்சினையையும் தீர்த்து வைக்காது தொண்டமானின் மூலம் ஜே. ஆர். வாக்குகளைப் பெற்று மீண்டும் பதவிக்கு வந்துள்ளார். அவ்வாறு ஆட்சி செய்தவர்களுக்கு அடுத்த பதவிக்காலத்தைக் கழிப்பது பெரிய விஷயம் இல்லை. தொண்டமானின் ஆதரவோடு ஜே. ஆர். வரப்போகும் காலத்தில் பிரச்சனைகளை தட்டிக் கழித்து விடுவார். அவ்வேளை தோட்டத் தொழிலாளர்கள் தமது நிலையையும் தொண்டமான் ஜே.ஆர். நிலையையும் உணர்ந்து அதற்கெதிராக விசுவரூபம் எடுத்தே தீருவார்கள் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

## அரசின் சர்வாதிகாரத்தை எதிர்த்து ஐக்கியப்படுவீர்!

### செங்கொடிச் சங்கத் தலைவர் —தோழர் கரவிட்ட அறிக்கை

தற்போதைய பாராளுமன்றத்தை மேலும் ஆறு வருட காலத்திற்கு நீடிப்பதற்கு சர்வசனவாக்கெடுப்பு நடாத்தப் படுகிறது. யூ. என். பி. அரசின் இம்முடிவு மக்கள் அனுபவித்துவரும் ஜனநாயக உரிமையைப் பறிப்பதுடன் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக இந் நாட்டுக்குப் பரிட்சயமான தேர்தல்முறையில் முறைகேடாகத் தலையிடும் முயற்சியுமாகும்.

இலங்கை தோட்டத்தொழிலாளர் செங்கொடிச் சங்கத்தின் தலைவர் தோழர் எச். எல். கே. கரவிட்ட பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளர்.

மேலும் அவ்அறிக்கையில் அரசாங்கத்தின் சர்வாதிகார நோக்கங்களை முறிபடிக்க தமது முழு சக்தியையும் தொழிலாளவர்க்கமும் சகல முற்போக்கு தேசபக்த ஜனநாயக சக்திகளும் ஒன்று திரட்ட வேண்டும் எனவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## கொத்மலை ஓயாத் திட்டத்தினல்

# தோ.தொழிலாளர்கள் பாதிப்பு

பிற்போக்கான ஆட்சியாளர்களின் நடைமுறையில் மக்கள் நலன்பேண் திட்டங்கள்-வாழ்க்கையை மேம்படுத்தாது மாருக பெருவாரியான மக்களை பலிகொண்டுள்ள வரலாறுகளே அதிகம். அதில் காணிச் சுவீகரிப்பு குறிப்பிடத்தக்கது. இதில் ஏராளமான தோட்டத் தொழிலாளிகள் அகதிகளாகியமையும்-அவர்களுக்கான தீர்வு இன்னும் நடைமுறைப்படுத்தப்படாதுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இன்றைய அரசாங்கத்தில் எத்தனையோ ஆற்று திசைதிருப்பத் திட்டங்கள் ஏற்பட்டுள்ளது. பாதிப்புகளே அதிகம். திட்டம் வகுத்தாலும் அது தோட்டத்தொழிலாளர்களை பாதிக்காது விட்டால் முழுமையான திட்டமாவதில்லை என்பது எமது நாட்டின் அரசாங்கங்களின் வரலாற்றில் காணப்படுகின்ற உண்மையாகும்.

கொத்மலை ஓயா திட்டத்திலே நீரில் மூழ்கும் கிராமங்களில் வசிப்பவர்களை குடியேற்றுவதற்காக அதன்சுற்றுப்புற தோட்டங்கள் சுவீகரிக்கப்பட்டு அதிலிருந்து தோட்டத் தொழிலாளர்கள் வலுக்கட்டாயமாக வெளியேறறப் படுகின்றனர், அத்துடன் ஆரம்பத்தில் அவர்கள் வசித்த தோட்டங்களில் இருந்து வெளியேற 'பற்றுச்சீட்டுகளை' பெற்ருல் ஆற்று திசைதிருப்பத்திட்டத்தின் அதிகாரசபையால் குடும்பத்துக்கு ரூ 2000 நிவாரணமாக கொடுக்கப்பட்டது, இது வெளியேறும் வேலைகள் பூர்த்தியானபின் பற்றுச் சிட்டுகளை காட்டினுல் தான் கொடுக்கப்பட்டது என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும், அத்துடன் தொழிலாளர்களுக்கு எந்தவித நிவாரணதிட்டமும் இன்றி தாங்களே வேறு தோட்டங்களை தேர்ந்தெடுத்து சொந்தமுயற்சியால் வேலை தேடி அலைய வேண்டியுமுள்ளது.

ஆனல் ஆரம்பத்தில் போலன்றி தற்போது 'பற்றுச்சீட்டு' இந்தத் திசைதிருப்ப நிர்வாகத்திடம் காட்டப்பட்டபோதும் ரூபா, 2000 கொடுக்கப்படுவதில்லை, இதனல் பல குடும்பங்கள் பெரும் இன்னல்களை சந்தித்துள்ளதுடன்! நிவாரணப் பணத்தை கொண்டு வேறுதோட்டத்தில் பதிவாக தோட்டத் துரைமார், கிளாக்கர்கள் போன்ருேர் கட்டுவ ய்க்கரிசி' போடமுடியாது வீதியோரங்களில் வாழ்க்கை நடாத்தும் தொழிலாள குடும்பங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது,

பாதிக்கப்படும் கிராமங்களுக்கு நிவாரணம் அளிக்கப்படுவது எவ்வளவுமுக்கியமோ அதேபோன்று பாதிக்கப்படுகின்ற தோட்டத் தொழிலாளர்களுக்கும் ஒரு நிவாரணத் திட்டம் வகுக்கப்பட்டு அவர்களுக்கு வாழ்வளிப்பது அவசியம். மாருக அநாதைகளாக வீதியில் விடப்பட்டுள்ளமை கண்டனத்துக்குரியதாகும், அதற்கான தீர்வு காண்பதற்கு சரியான வழிவகைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். வெறுமனே ரூபா. 2000 திட்டமோ ஏமாற்று வித்தைகளோ ஏற்றுக்கொள்ள முடியாததுடன் தீர்வு ஒழுங்கு படுத்தப்பட்டு விரைவு படுத்தப்படவும் வெண்டும். தோட்டத் தொழிலாளிகளுக்கு சுவர்க்கம் காட்டப்போவதாகக் கடந்த ஐந்து ஆண்டுகளாக வெறுவாய் புலம்பி வரும் யூ. என். பி. யும் தொண்டமானும் கொத்மலை ஓயாத் திட்டத்தால் பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு என்ன வழி காட்டப் போகிருர்கள்.

### அரசியல் ஆபத்தை .....

(1-ம் பக்கத் தொடர்)

விட்டாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

எனவே பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தைப் பொதுத்தேர்தலின்றிப் பொதுசன வாக்கெடுப்பின் மூலம் நீடிக்கமுற்படும் அரசாங்கத்தினதும்—ஜே. ஆர். ஜெயவர்த்தனவினதும் குறுக்கு வழியையும், அதில் அடங்கியிருக்கும் அரசியல் அபாயத்தையும் நாட்டு மக்கள் அனைவரும் புரிந்து கொள்வது மிக அவசியம் என எமது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வற்புறுத்துவதுடன், மக்கள் இவ் ஆபத்துக்கு எதிராக அணிதிரள வேண்டும் எனவும் எமது கட்சி கேட்டுக்கொள்கின்றது என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சாதி அமைப்பைத்......

2-ம் பக்கத் தொடர் ...

ளாக உலாவுகின்றனர், ஆனல் சாதாரண தொழிலாளி விவசாயிகளான தாழ்த்தப்பட்ட மக்கள் பச்சையாகவே சாதி வெறியால் கொலை செய்யப் படுகின்றனர்.

இந்நிலை மாற வேறு யாரையும் தாழ்த்தப்பட்ட மக்கள் எதிர்பார்ப்பதில் பயன் இல்லை தமது சொந்தப் பலத்தையும் சொந்தப் போராட்டத்தையும் கடந்தகால அனுபவங்களினூடாக முன்னெடுக்க வேண்டும்,

இன்றைய புதிய நிலைமைகளைக் கணக்கில் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்கள் தமது ஐக்கியத்தைப்பலமடங்காக்கி உயர் சமூகம் என அழைக்கப் படுவோர் மத்தியில் உள்ள முற்போக்கு நல்லெண்ணம் கொண்ட சக்திகளினது ஆதரவோடு, சரியான கொள்கை தந்திரோபாயம் என்பவற்றைக் கடைப்பிடித்து போராட்டங்களை முன்னெடுத்தால் நிச்சயம் சாதி வெறியர்களை அடக்கி சாதி அமைப்பைத் தகர்க்கும் போராட்டத்தில் முன்னேற முடியும். அக்டோபர் 21 எழுச்சி எமக்கு அளித்தபடிப்பினை இதுவேயாகும்.

★

### அரசின் அடுத்த நடவடிக்கை

1-ம் பக்கத் தொடர்

நடத்தி அக் கட்சிக்குள் ஜனநாயகம் இருக்கிறதா இல்லையா என்று முடிவு கட்ட முயலும் நடைமுறையை இன்று இலங்கையில் தான் காணமுடிகிறது. ஏற்கனவே இவ்வாருன நடைமுறை இருந்திருப்பின் அது ஹிட்லர், முசோலினி போன்ற பாசிசவாதிகளின் ஆட்சியில்தான் நடந்திருக்கிறது. அண்மை உதாரணம்தேவைப்படின் தென்கொரிய சர்வாதிகாரிகளின் கீழும், சியாஉல் ஹக்கின் பாகிஸ்தானிலும் தான் நடந்திருக்கிறது. பிலிப்பைன்ஸ், இந்தோனிசியாபோன்ற பாசிசசர்வாதிகார நடைமுறைகளின் கீழும் இதுபோன்று நடைபெறுகிறது.

இன்று நம் நாட்டை முதலாளித்துவ பாராளுமன்ற அமைப்பு முறையில் இருந்து நேரடியான பாசிச சர்வாதிகார அமைப்பு முறைக்கு இழுத்துச் செல்வதற்கான சகல முயற்சிகளையும் நமது நாட்டு பெரு முதலாளித்துவக் கட்சியான யூ. என். பி. செய்து வருகின்றது. ஏகாதிபத்திய பிற்போக்கு சக்திகள் இதைச் செய்து முடிப்பதற்கு தகுதியான தலைவர் ஜே. ஆர். என்றும், இன்றைய சூழ்நிலையைத் தவறவிடக்கூடாது என்றும் முடிவு செய்துள்ளார்கள்.

இதுவரை காலமும் முதலாளித்துவ பாராளுமன்ற அமைப்பு முறையின் கீழ் மக்கள் ஓரளவு தூரத்திற்கு சில சுதந்திரங்களையாவது அனுபவிக்க முடிந்தது. கருத்துச் சுதந்திரம், பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டம்கூடும் உரிமை வேலை நிறுத்தம் செய்யும் உரிமை, எதிர்ப்புத் தெரிவிக்கும் உரிமை போன்றவற்றை மக்கள் அனுபவிக்க முடிந்தது. ஆனல் இன்று அத்தனையும் மிகக் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளன. அந்த அமைப்பின் பிரதான அம்சமான பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் உரிமை கூட பொதுசன வாக்கெடுப்பின் மூலம் இல்லாமல் போகப் போகிறது.

பொது சனவாக்கெடுப்பில் யூ. என். பி. அரசு வெற்றி பெற்ருல் ஏற்கனவே பிரசாரப்படுத்தப்படும் தேசிய அரசு ஒன்று உருவாக்கப்படும், அதே சமயம் நாட்டில் ஏனைய எதிர்க்கட்சிகளின் அவசியம் தேவை இல்லை என்றும் அவை ஒருமுகப்படுத்தப்பட்ட அபிவிருத்திக்கு குந்தகம் விளைவிக்கக்கூடும் என்றும் கூறி சகல எதிர்க்கட்சிகளுக்கும் தடைவிதிக்கப்படலாம் என்றே நம்பப்படுகிறது.

ஆதலால் யூ. என். பியினல் எதிர்காலத்திற்காக திட்டமிடப்பட்டுள்ள சர்வாதிகார நோக்கங்களை முறியடிப்பதற்கு மக்கள் முன்கிடைத்துள்ள கடைசிச் சந்தர்ப்பமே சர்வசன வாக்கெடுப்பாகும், இதை மக்கள் சரியான வழிகளில் பயன்படுத்தி பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்குவது மிக மிக அவசியத் தேவையாகும், இந்நோக்கத்திற்காக எதிர்க்கட்சிகள் பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் அதன் தலைவியான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவினதும் தலைமையில் ஒன்றுபட்டுள்ளதை எமது கட்சி வரவேற்கின்றது. இக்கூட்டமைப்பு மேன் பேலும் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் இயக்கங்களை நடாத்த முன்வரவேண்டும் என்பதே எமது விருப்பமாகும். அதேவேளை மக்கள் ஒரே முகமாக அணி திரண்டு தமது யூ. என். பி. எதிர்ப்பு இயக்கத்தில் முன்னேற வேண்டும் என்பதும் எமது கட்சியின் வேண்டுகோளாகும்.

அச்சுப்பதிப்பு; யாழ்ப்பாண அச்சகம், 407, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் வெளியீடு; சி. நவரத்தினம் 15/1 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்